Stay Connected With:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°c 26.°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 347 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 23, சனி 09.11.2013

# தமிழருக்கு அதி உச்ச அதிகாரம் கொழும்பிடம் பிரிட்டன் கோரும்

## உலகத் தமிழர் பேரவைத் தலைவரிடம் அந்நாட்டு அரசு உறுதி


கொழும்பு, நவம்பர் 09

"ஈழத்தமிழர்களுக்கு அதி உச்சப் படியான அரசியல் அதிகாரங்களை - உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது பிரிட்டனின் வரலாற்றுக் கடமையாகும். எனவே, பொதுநல வாய மாநாட்டில் பிரதமர் டேவிட் கமரூன் இதை வலியுறுத்துவார் என்பது உறுதி" என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண. எஸ்.ஜே. இமானுவேல் அடிகளார் நேற்றுத் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர் பில் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையிடம் நேரடியாகவே கேள்வி எழுப்புவார் என்று அரச பிரதிநிதிகள் தம்மிடம் உறுதியளித்துள்ளனர் என்றும் இமானுவேல் அடிகளார் கூறினார்.

பொதுநலவாய மாநாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:

"பொதுநலவாய மாநாட்டைப் புறக் கணிப்பதைவிட அதில் பங்கேற்று அழுத்தங்களை பிரயோகிப்பது மேல் என்று பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது. இது ஒரு வகையில் நியாயம் தான். அவர்கள் மாநாட்டில் குரலெழுப் புவார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இதற்கான கடப்பாடும் பிரிட்டனுக்கு இருக்கின்றது.



மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்

"குறிப்பாக ஒரு காலகட்டத்தில் பிரிட்டன் இலங்கையில் ஆட்சிபுரிந்தது. பின்னர் அவர்கள் சுதந்திரம் வழங்கிவிட்டு அங்கிருந்து வெளியேறினர். எனவே, தமிழ் மக்களுக்குரிய அரசியல் அதிகாரங்

21

# பலாலி கிழக்கில் வேறு பிரதேச மக்களை குடியமர்த்த இராணுவத்தினர் நடவடிக்கை

## காணிகளையும் கொண்டு சென்று காட்டினர்

யாழ்ப்பாணம், நவ. 09

பலாலி கிழக்குப் பகுதியில் மீள் குடியமர்வதற்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பலாலி கிழக்கு என்று வலி. வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் அடையாளப்படுத்தப்படும் பகுதியில் 350 ஏக்கர் நிலப்பரப்பை உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிப்பதாக பலாலி பாதுகாப்புப் படை இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தப் பகுதியில் வசித்தவர்களை விடுத்து இன்னொரு பிரதேசமான கோணப்புலம் முகாமில் தங்கியிருக்கும் தையிட்டி மற்றும் மயிலிட்டியைச் சேர்ந்த மக் களை கொண்டு சென்று குடியேற்றுவதற்கும் இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அந்த முகாமில் தங்கியிருந்த 150 குடும் பங்களை குறித்த பகுதிக்கு நேற்றைய தினம் பலாலி கிழக்குக்கு

21

# யாழ். பல்கலை மட்டும் டிசெ.1வரை மூடப்படும்

## மாவீரர் தினநிகழ்வுகளைத் தடுப்பதற்கா?

யாழ்ப்பாணம், நவ.9

பொதுநலவாய மாநாட்டுக்காக நாட்டில் ஏனைய பல்கலைக்கழகங்கள் 17 ஆம் திகதி வரை மூடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில் இந்த அறிவிப்புக்கு மாறாக யாழ். பல்கலைக்கழகத்தை எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை மூடுவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும்

21

# வழக்கம்பரையில் மௌனப் பிரார்த்தனை

## அடக்கு முறைகள் நீங்கக் கோரி



யாழ்ப்பாணம், நவ.09

மீண்டும் குழப்பகரமான சூழல் இயல்பாகவே வடக்குப் பகுதியில் தோற்றுவிக்கப்படும் நிலைமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் 6 விடயங்களை முன்னிறுத்தி ஜனாதிபதிக்கு மனு அனுப்பியுள்ளார்.

இந்த விடயங்களை முன்வைத்து வழக்கம்பரை அம்மன் கோயிலில் நேற்று வெள்ளிக்கிழமை ஒரு மணியிலிருந்து மூன்று மணி வரை மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந்தப் பிரார்த்தனையில் வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சனி ஐங்கரன், மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள், நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் ஏனைய உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் வடக்கு மாகாண

21

# மக்களிடையே முரண்பாட்டை உருவாக்குகிறது இராணுவம்

## குற்றஞ்சாட்டுகிறார் வலி.வடக்கு தவிசாளர்

யாழ்ப்பாணம், நவ. 09

வலி.வடக்கைச் சேர்ந்த ஒரு பகுதி மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தாது வேறு இடங்களில் மீள்குடியமர்த்தி குறித்த இரு பகுதி மக்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்த இராணுவத் தினர் முற்படுகின்றனர் என்று குற்றம் சாட்டியுள்ளார் வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசா ளர் சோ.சுகிர்தன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுநலவாய மாநாடு நடை

21

# வடக்குக்கு வாருங்கள் மாநாட்டை தவிருங்கள்

## மன்மோகனிடம் மன்னார் ஆயர் கோரிக்கை



மன்னார், நவ.9

இந்தியப் பிர்தமர் கலாநிதி மன்மோகன் சிங் வடக்குக்கு பயணம்செய்து போரால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவேண்டும். அதைவிடுத்து கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் நோக்கு

21

## கைக்குண்டுகள் மிருசுவிலில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.09

மிருசுவில் பகுதியில் பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து 10 கைக்குண்டுகளும், 14 ஆயிரத்து 600 சி.வை. 6 ரக ரவைகளும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். ஜிவ்றி தெரிவித்தார்.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இந்த

21

# தென்பகுதி மீனவருக்கு எதிராக மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்



மன்னார், நவ.09

தென்பகுதி மீனவர்களின் வருகையைக் கண்டித்து மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராம மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் சௌத் பார் தென் பகுதிக் கடற்கரையில் தங்கி

21

# இரு பிள்ளைகளின் தாய் கிணற்றில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ.9
இணுவில் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாயார் கிணற்றிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார். விசாரணை மற்றும் உடற் கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இணுவில் கிழக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த பிரபாகரன் வித்தியா (வயது 42) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.
அவரது வீட்டுக்கு முன்பாக உள்ள கிணற்றிலிருந்தே நேற்று அதிகாலை 5.30 மணியளவில் அவர் சடலமாக மீட்கப்பட்டார். அவர் அணிந்திருந்த செருப்பு கிணற்றுக்கு வெளியே காணப்பட்டது. பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (து-4)

# நாச்சிகுடாவில் கைதான மீனவருக்கு விளக்கமறியல்

வலி.தென்மேற்கு, நவ. 9
நாச்சிக்குடா கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட றோலர் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த மூன்று மீன்பிடி வள்ளங்களை நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ள கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான், வழக்கு விசாரணையை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.
கடந்த வாரம் நாச்சிக்குடா கடற்பரப்பில் மூன்று வள்ளங்களில் தடை செய்யப்பட்ட றோலர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த 14 மீனவர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்த நாச்சிக்குடா மீனவர் அவர்களை கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.
14 மீனவர்களையும் பொறுப்பேற்ற திணைக்கள அதிகாரிகள் அனைவரையும் கிளிநொச்சி நீதிவானிடம் முன்னிலைப்படுத்தியபோது அனைவரையும் 50 ஆயி ரம் ரூபா சரீரப்பிணையில் செல்லுமாறும் வள்ளங்களைக் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்டு மேல் விசாரணையை இம் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.
இந்த வழக்கு மீண்டும் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள மூன்று வள்ளங்களையும் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ள நீதிவான் விசாரணையை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.
வலைப்பாடு கடற்பரப்பில் இரு வள்ளங்களில் தடை செய்யப்பட்ட றோலர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த எட்டு மீனவர்களை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் வழக்கு விசாரணையை இம் மாதம் 13 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் வலைப்பாடு கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட றோலர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த எட்டு மீனவர்களையும் சுற்றி வளைத்துப் பிடித்த வலைப்பாடு மீனவர்கள், இரு வள்ளங்களையும் மீனவர்களையும் கிளிநொச்சி கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.
திணைக்கள அதிகாரிகள் எண்மரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிவானிடம் முன்னிலைப்படுத்தினர். அனைவரையும் 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கு விசாரணையை இம் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (து-115)


## சிங்கள மாணவர்கள் கைகலப்பில்

யாழ்ப்பாணம், நவ.9
யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்களிடையே நேற்று வெள்ளிக்கிழமை கைகலப்பு இடம்பெற்றுள்ளது. இதனால் காயமடைந்த ஒரு மாணவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.
விஞ்ஞானபீட முதலாம் வருடத்தில் கற்கும் சிங்கள மாணவர்களுக்கும் இரண்டாம் வருடத்தில் கற்கும் சிங்கள மாணவர்களுக்கும் இடையே நேற்று இந்தக் கைகலப்பு இடம்பெற்றது. (து-4)

# ஒற்றுமையுடன் செயற்பட்டு உரிமைகளை வெல்வோம்

## கூட்டமைப்புப் பிரமுகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.09
வடக்குத் தேர்தலில் வெற்றியீட்டியதன் மூலம் இன்று கிடைக்கப்பெற்றுள்ள நல்லதொரு சூழலைப் பயன்படுத்தி அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் தெரிவித்தார்.
அமரர் 'ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 112 ஆவது பிறந்த தினநிகழ்வு குருநகரில் உள்ள அவரது சிலைக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது. இதில் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு நல்ல ஒரு அரசியல் தீர்வைப் பெறுவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இது எமது கடந்த கால அரசியல் பட்டறிவாகும்.
கடந்தகாலப் போரினால் எமது மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர். பல ஆயிரக்கணக்கான விலை மதிக்க முடியாத உயிர்கள் பறிக்கப்பட்டன.
ஆயினும் எமது இலட்சியப் பயணத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் வடக்குத் தேர்தலில் துணிந்து நின்று வாக்களித்ததை நாம் மறந்து விட முடியாது. இன்று எமக்கு வேண்டியது ஒற்றுமையே! ஒற்றுமையே பலம் இதை எல்லோரும் உணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (து-17)



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற கந்த சஷ்டி திருவிழாவின் இறுதி நாளான நேற்று சூர சங்காரம் இடம்பெற்றது. ஆறுமுகப் பெருமான் வெள்ளிக் கடா வாகனத்தில் சூர சங்காரம் நிகழ்த்தி அடியார்களுக்கு அருள் பாலித்தருளினார். (து-17)

# புத்தூரில் யுவதி சாவு; சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், நவ. 9
புத்தூர் கிழக்கில் கிணற்றில் இருந்து யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜிவ்றி தெரிவித்தார்.
வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மைதிலி (வயது - 26) என்பவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இவரது இறப்பு தொடர்பில் சந்தேகம் இருந்தமையால் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் - என்றார். (து-14)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் நிரபராதி

யாழ்ப்பாணம், நவ. 9
தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரான பொட்டு அம்மானுக்குப் பாதுகாப்பு வழங்கினார் என்றும், படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினார் என்றும் குற்றஞ்சாட்டி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர், நிரபராதியென இனங்கண்டு யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

> “நீதிமன்றில் சமர்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மை விளம்பல் விசா ரணையின் போது நிரா்கரிக் கப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.
வட்டக்கச்சியைச் சேர்ந்த மகாதேவன் ரமணதாஸ் என்பவரே இந்தக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.
விடுதலைப்புலிகளின் உறுப்பினராக இருந்து கொண்டு 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சாவகச்சேரியில் பொட்டு அம்மானுக்குப் பாதுகாப்பு வழங்கினார் என்றும், 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புத்தூரில் இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினார் என்றும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.
கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. அவர் தொடர்பான வழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.
அவர் வழங்கியதாகக் கூறி நீதிமன்றில் சமர்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மை விளம்பல் விசாரணையின் போது நிராகரிக்கப்பட்டது. அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லாதமையால் அவர் நிரபராதியென இனங்கண்டு விடுதலை செய்யப்பட்டார். (து-4)

# உண்ணாவிரதப் போராட்ட நாளில் எதற்கு மாநகர சபைக் கூட்டம்?

## பிற்போடக் கோருகிறார் மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி

யாழ்ப்பாணம், நவ. 9
வலி. வடக்கு மீள்குடியேற்ற அமைப்பினால் நடத்தப்படவுள்ள உண்ணா விரதப் போராட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்னும் நோக்கத்துடன் அன்றைய தினம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வலி.வடக்கு வீடழிப்பு, காணி சுவீகரிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றம் போன்றவற்றைக் கண்டிக்கும் வகையில் வலி வடக்கு மீள் குடியேற்ற அமைப்பினால் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது .இந்தப் போராட்டத்துக்கு தமிழ் மக்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் உறுப்பினர்களையும் பங்கு பற்றுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறான நிலையில் கடந்த 3 மாதங்களாக மாதாந்தக் கூட்டத்தை நடத்தாத யாழ் மாநகர சபை, உண்ணாவிரதப் போராட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் பங்கு பற்றுவதைத் தடுக்கும் நோக்குடன் திடீரென அன்றைய தினம் அந்தக் கூட்டத்தை நடத்துவதாக அறிவித்துள்ளது.
எனவே தமிழ் மக்களது உரிமைக்காக நடத்தப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் பங்கு பற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அன்றைய கூட்டத்தை பிற்போட வேண்டும் என்று பரஞ்சோதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (ஒ-7-14)

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், நவ.9
திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள செயற்திறன் அரங்க இயக்கத்தின் அலுவலகத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இயக்குநர் ஹிட்ச் கொக்கின் இயக்கத்தில் உருவாகியுள்ள "பிறீஸி" என்ற திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. (ஒ-17)

## இளைஞன் காயம்

சாவகச்சேரியில் வெள்ளம் தேங்கி நின்ற வீதிக் குழியில் நேற்று வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்த இளைஞர் படுகாயமடைந்தார். காய மடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-9)

# ஹெரோயின் வைத்திருந்தவர் நேற்றுப் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ.09
சட்ட விரோதமாக ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.
சந்தேக நபர் சார்பாகப் பிணை விண்ணப்பம் யாழ்.மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் பிணை விண்ணப்பத்தைப் பரீசீலித்து பிணை அனுமதி வழங்கினார்.
யாழ். கொட்டடி, மீனாட்சி அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த ஒருவரே கடந்த வருடம் மார்ச் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் 3.94 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைச் சட்ட விரோதமாக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.
இந் நிலையிலேயே பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். இது தவிர மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. (து-4)

## வவுனியாவில் தொழில் சந்தை

வவுனியா, நவ.9

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் தொழில் சந்தையொன்று இன்று இடம்பெறவுள்ளது.

உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் கீழ் வரும் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்துடன் இணைந்து மாவட்ட பிரதேச செயலகங்களினால் நடத்தப்படும் மாபெரும் தொழில் சந்தை காமினி மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் பிரபலமான தனியார் நிறுவனங்கள் இந்த நிகழ்வில் பங்கு கொள்ளவுள்ளன.

இங்கு வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழுங்கல் உட்பட தொழில் வழிகாட்டல் சேவை, சுயதொழில் வாய்ப்புகளுக்கான ஆலோசனை, வியாபார ஆலோசனை, சிறுகடன் திட்டங்கள் போன்ற சேவைகள் வழுங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

# வியாழன் ஆரம்பமானது நற்கருணைக் கண்காட்சி



குருநகர்.நவ.9

யாழ்.மாவட்டத்தின் மறைக் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். மறைக் கல்வி நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நற்கருணைக் கண்காட்சியை யாழ்.மறை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் வண. பிதா அன்ரனிதாஸ் அடிகளார் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வுக்கு முன்னர் இடம்பெற்ற மங்கல விளக்கேற்றலில் வண.பிதா அன்ரனிதாஸ் அடிகளார், யாழ்.மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் வண.பிதா ஏ.அகஸ்ரின் அடிகளார், வண.பிதா ரவிச்சந்திரன் அடிகளார், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத் தந்தை வண.பிதா றோய் பேடினன்ற் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வில் புனித சாள்ஸ் மகாவித்தியாலய மாணவ, மாணவிகள், ஆசிரியர்களும் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தக் கண்காட்சி இன்று சனிக்கிழமை பி.ப.4.30 மணி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நற்கருணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற புதுமைகள் அடங்கிய படங்கள் இந்தக் கண்காட்சியில் தமிழ், சிங்களம், ஆங்கில மொழி விளக்கங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (வ-51)

குற்றங்களுடன் தொடர்புடைய

# 151 பேர் கைது

## கடந்த வாரத்தில் மட்டும்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 151 பேர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொர்லிஸ் பிரிவில் காசோலை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2 பேரும், பிறரை அடித்துக் காயப்படுத்தியமை தொடர்பில் 17 பேரும், களவுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 2 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 16 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் 3 பேரும், அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்த 8 பேரும், குடிபோதையில் அமைதிக்குப்பங்கம் விளைவித்த சந்தேகத்தின் பெயரில் 7 பேரும், வீட்டில் அத்துமீறி பிரவேசித்த குற்றத்துக்காக 8 பேரும், மாசடையும் வகையில் சூழலை வைத்திருந்த ஒருவரும், வேறு குற்றச் செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 4 பேரும், வீதி விபத்துக்குக் காரணமாகியிருந்த குற்றத்துக்காக 4 பேரும், மனைவி மற்றும் பிள்ளைகளைப் பாதுகாக்கத் தவறிய ஒருவரும் என 73 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவில் பெரியளவிலான குற்றங்களுடன் தொடர்புடைய 4 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 14 பேரும், சந்தேகத்தின் பெயரில் 10 பேரும், போதையில் வாகனம் செலுத்திய 2 பேரும், வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 48 பேரும் என 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டோர் அந்தந்தப் பகுதி நீதிமன்றங்களில் முற் படுத்தப்பட்டுள்ளனர். (வ-14)

## 'ஸ்கான்' கிளினிக் திங்கள் ஆரம்பம்

தென்மராட்சி, நவ.9

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நவம்பர் மாதத்துக்கான ஸ்கான் கிளினிக் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# இரு நாட்டு மீனவர் பிரச்சினை உடனடியான தீர்வு அவசியம்

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.9

தமிழக மீனவர்கள் நடுக்கடலில் கொல்லப்படுவதையும், தாக்கப்படுவதையும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. அது போன்றே, இந்திய இழுவைப் படகுகளால் எமது மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே இந்தப் பிரச்சினைகளுக்குத் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணத் தமிழகத் தலைவர்கள் முன்வர வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழர்களுக்கும், தமிழகத்தமிழர்களுக்கும் இடையில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கலாசாரத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. நாம் தொப்புள் கொடி உறவுகள் என்று இரு தரப்பினரும் உரிமையோடு சொல்லிக் கொள்கின்றோம். எங்கள் ஈழத் தமிழர்களின் விடிவுக்காக தமிழக அரசியல் தலைவர்கள், மாணவர்கள் எனப் பலரும் நடத்தும் போராட்டத்துக்கு நாம் தலை சாய்க்கின்றோம்.

ஆனால் இவ்வாறான தொரு நிலையில் இரு தரப்புகளுக்கும் இடையில் கடற்தொழில் பிரச்சினை புதிய தொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

வட மாகாணத்தில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் கடற்தொழிலையே நம்பி வாழ்கின்றன. 2003 ஆம் ஆண்டில் வடக்கின் பொருளாதாரத்துக்கு உதவுவதில் 12 சதவீதம் காணப்பட்ட மீன் பிடி இன்று அண்ணளவாக 3 சதவீதமாகவே உள்ளது.

முன்னர் சாராசரியாக ஒரு வருடத்தில் 250 நாள்களுக்கு மேல் மீன் பிடிக்கின்ற மீனவர்கள் இன்று கடல்வளப் பற்றாக்குறையால் 70 தொடக்கம் 110 நாள்கள் வரையே மீன் பிடிக்கச் செல்கின்றனர். வடக்கில் ஒரு லட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை தீர்மானிப்பதாகக் கடற்தொழில் காணப்படுகிறது. ஆனால் இன்று அது கடும் சவாலைச் சந்தித்துள்ளது.

இந்த மீன்வள வறட்சிக்கு காரணம், சகோதர தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகள்தான் என்பது எம்மைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. இழுவைப் படகுகளில் வந்து, தடை செய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்தி மன்னார் முதல் சுண்டிக்குளம் கடல் பகுதி வரையிலும் இவர்கள் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது மீனவர்கள் தொழில் செய்ய முடியாது போயுள் ளது.

தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள எமது மீனவர்களுக்கு, தமிழக மீனவர்களது அத்துமீறல்கள் நெருக்கடியைத் தந்துள்ளன.

மறுபுறத்தில் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் சுட்டுக் கொல்லப்படுவதனையும், தாக்கப்படுவதனையும் எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாது. அத்துமீறுகின்ற தென்னிலங்கை மீனவர்கள் மீது எதுவித நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில், தமிழக மீனவர்கள் மீது மட்டும் சட்ட நடவடிக்கை என்ற போர்வையில் தாக்குதல் நடத்தப்படுவது எந்த வகையில் நியாயம்?

ஒருதொகுதி தமிழக மீனவர்களின் இந்தச் செயற்பாடுகளை காரணமாகக் கூறி ஒட்டு மொத்தமாக தமிழக மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவங்களையும், இழுவைப்படகுகளால் ஈழத்தமிழரின் வாழ்வாதாரத்திற்கு ஏற்படுகின்ற சேதத்தையும் தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான பேச்சுகள் அவசியமாகும்.

இந்தப் பிரச்சினையை நாம் கவனிக்காமல் விட்டால் எதிர்காலத்தில் இரு தரப்பு மீனவர்களிடையேயும் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

எனவே இரு தரப்பு உறவுகளையும் பேண இந்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கிறேன் - என்று தெரிவித்துள்ளார். (ஜ-5)

## குருநகரில் நடைபெற்ற ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 112 ஆவது பிறந்த தின நிகழ்வு





யாழ்ப்பாணம், நவ. 9

சட்டமேதை ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 112 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுக் குருநகரில் உள்ள அவரது திருவுருவச் சிலையடியில் இடம்பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சூ.சொலமன் சிறில் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி வடமாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், விந்தன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி ஐங்கரன் நாகரஞ்சினி ஆகியோர் அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர். நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-17-23)

பனஞ்சாராய உற்பத்தியை

# சர்வதேச தரத்துக்கு அதிகரிக்க நடவடிக்கை

தென்மராட்சி, நவ.9

யாழ்.மாவட்டத்தில் கடந்த 30 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் பனஞ்சாராய உற்பத்தியை சர்வதேச தரத்துக்கு உயர்த்த மதுவரித் திணைக்கள ஆணையாளர்நாயகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சமாசங்களால் வடிசாலைகள் நடத்தப்பட்டு பனஞ்சாராயம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

கடந்த செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த மதுவரித்திணைக்கள ஆணையாளர் நாயகம் தலைமையிலான குழுவினர் வரணி, திக்கம், சங்கானை ஆகிய இடங்களில் உள்ள வடிசாலைகளைப் பார்வையிட்டுடன் அவற்றை நடத்தும் சமாசப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்திச் சென்றனர்.

இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக வடிசாலைகளை நடத்தும் மூன்று சமாசங்களின் பிரதிநிதிகள் நாளை மறு தினம் திங்கட்கிழமை தென்னிலங்கையில் இயங்கும் வடிசாலைகள், போத்தலில் சாராயம் அடைக்கும் தொழிற்சாலைகள் ஆகியவற்றை பார்வையிட அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை சிலாபத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு தொம்பே, சீதுவ, மாரவில ஆகிய தென்னஞ்சாராய வடிசாலைகள் மற்றும்போத்தலில் அடைக் கும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் செயற்பாடுகள் அவர்களுக்குக் காண் பிக்கப்படவுள்ளன.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத் தின் முயற்சியால் யாழ். மாவட்டத்தில் பனங்கள் உற்பத்தியில் ஈடுபடும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் நன்மையடைய வுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(வ-9)

# தடை விதிக்கப்பட்ட தொழில்முறையை நிறுத்துக

## கடற்றொழிலாளருக்கு மீன்பிடி அமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.9

தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்துவதை எமது மீனவர்களும் நிறுத்திக் கொள்ள வேண்டும். கடல் வளம் அழிவடைந்து செல்வதால் எதிர்காலத்தில் நாம் வேறு நாடுகளிலிருந்து மீனை இறக்குமதி செய்ய வேண்டி ஏற்படும் என்று வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒழுங்கு செய்திருந்த கலந்துரையாடலில் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கருத்துரைத்த சமாச செயலாளர், இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் சிறுதொழில் மீனவர்களின் நாளாந்த தொழில் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் மீன்பிடி உபகரணங்களின் விலை ஏற்றமும் மக்களை பாதித்துள்ளது என்பதைக் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் உரையாற்றிய அமைச்சர், மீனவ சமூகங்கள் ஒருவருக் கொருவர் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும். அதனூடாகவே என்னால் எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில், இராஜதந்திர ரீதியில் ஆராய்ந்தே செயற்பட வேண்டும். நாமும் இங்கு தடை செய்யப்பட்ட தொழில்களைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். கடல் வளங்கள் அதிகமாக அழிந்து கொண்டு செல்லும் அபாயம் இருப்பதனால் எதிர்காலத்தில் வேறு நாடுகளிலிருந்து உணவுக்காக மீனை நாம் கொள்வனவு செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

எதிர்கால சந்ததியினருக்கு நாம் எதை விட்டுச் செல்லப் போகின்றோம் என்பது தொடர்பில் சற்றுச் சிந்தியுங்கள் - என்றார்.

(வ-5)

# இத்தாலிக்கு அனுப்புவதாக நெல்லியடியில் மோசடி

இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 22 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ள சம்பவம் நெல்லியடி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த நபரிடம் கொடிகாமத்தை சேர்ந்த நபர் இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 22 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று மோசடி செய்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 6 ஆம் திகதிக்கும் 2012 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 4 ஆம் திகதிக்கும் இடைப் பட்டகாலப்பகுதியில் குறித்த மோசடி இடம் பெற்றமை தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடந்த 4 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் இது வரை கைது செய்யப்படவில்லை. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ-14)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## கண்ணீர் அஞ்சலி



குருநகரின் சமூக சேவையாளரும், கலைப்பணியின் மேம்பாட்டுக்காக உழைத்தவருமான

கலாபூஷணம்

**வி.ஜே.கொன்ஸ்ரன்ரைன் (J.P)**

நேற்று 08.11.2013 காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குருநகர். (சி/12221) (10,14) அங்கத்தவர்கள், குருநகர் இளைஞர் கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



திருமறைக் கலா மன்றத்தின் மூத்த உறுப்பினரும், முன்னாள் பொதுச் செயலாளருமான

கலாபூஷணம்

**வி.ஜே.கொன்ஸ்ரன்ரைன் (J.P)**

நேற்று 08.11.2013 இல் காலமானதையிட்டு துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி/12220) (10,14) இயக்குநர், அங்கத்தவர்கள், திருமறைக் கலாமன்றம்.

## மரண அறிவித்தல்

### நடராஜப்பிள்ளை கைலாசநாதர்

( இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற ஊழியர்)



யாழ்.சிவன்கோயிலடியை பிறப்பிடமாகவும் சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜப்பிள்ளை கைலாசநாதர் நேற்று (08.11. 2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜாப்பிள்ளை - ஜெயா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்வர்களான குமாரசாமி - ஜானகி தம்பதியரின் அன்பு மருமகனும், நளினியின் அன்புக் கணவரும் - பிரதீபா, மனோஜ்.(METROOF) சுவர்னா, வசந் (BOC, மல்லாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் - முரளிதரன், கல்பனா, தங்கபாலன், வனஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் - ஹரிணி, அட்ஷயா, ருக்சனா, சஞ்சனா, தேஜஸ்வினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி, இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
0777842544
0776669033

சூராவத்தை, சுன்னாகம். 39860

# மோட்டார் சைக்கிள் எரிப்பு; மூவர் மறியலில்

யாழ்ப்பாணம், நவ. 9

தனிப்பட்ட விரோதம் காரணமாக சபாரி ரக மோட்டார் சைக்கிளை அபகரித்து அதனைத் தீயிட்டு கொழுத்திய வைத்த சம்பவம் ஒன்று வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி அரசடி வீதி தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த வரது சபாரி ரக மோட்டார் சைக்கிளைக் களவெடுத்த குழுவினர் அதனைத் தீ மூட்டி கொளுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வல்வெட் டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அடுத்து கெருடாவில் தொண்டமானாறு பகுதியைச் சேர்ந்த 3 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

(வ-14)

# திருக்கல்யாணம் இன்று

சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ஸ்கந்த சஷ்டி விழாவின் இறுதி நாளான இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு முருகன், வள்ளி, தெய்வானைக்கு திருக் கல்யாணம் இடம் பெறவுள்ளது.(த)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் அருட்பிரகாசம்



நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் அருட்பிரகாசம் நேற்று ( 08.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருட்பிரகாசத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம் தனலக்சுமி, முருகமூர்த்தி மற்றும் கிருஷ்ணமூர்த்தி (கனடா) சாங்கரமூர்த்தி ( அமெரிக்கா) பராசக்தி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 10.11.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் சகோதரியான திருமதி. வன்னியசிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தினி (சாந்தா பெறாமகள்)
077 - 6511682

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி 39858



உதயன்
09/11/2013



## விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், நவ. 9
வடமராட்சி "உயில்" கலை இலக்கிய மன்றத்தினர் அண்மையில் வெளியான இரண்டு நூல்கள் தொடர்பான விமர்சன அரங்கை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

எழுத்தாளர் அநாதரட்சகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பரம்சோதி தங்கேஸ் எழுதிய யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரத்தில் 'சாதியமும் இனத்துவமும்' என்னும் நூலும் அ.கௌரிகாந்தன் எழுதிய "யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்" என்னும் நூலும் விமர்சனத்துக்கு எடுக்கப்படவுள்ளன. விமர்சன உரைகளை ஏ.சி. ஜோர்ஜ். தெணியான் சி.இராஜேஸ்கண்ணன், சி.ரமேஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (வ-9)

## நாவற்குழி நூலகத்தில் பொதுநோக்கு மண்டபம்

தென்மராட்சி, நவ. 9
சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலக வளாகத்தில் வாசகர்களின் பயன்பாட்டுக்கான பொதுநோக்கு மண்டபம் அமைக்கப் படவுள்ளது.

மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு இடம்பெறும். பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண சபைத் தவிசாளர் சீ.வீ.கே.சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைப்பார். (வ-9)

## கழிவுகளால் நிரம்பிய வடிகால்

தென்மராட்சி, நவ.9
கொடிகாமம் நகர்ப் பகுதி வடிகாலுக்குள் தேங்கியுள்ள கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதி அகலிப்பின் பின்னர் கொடிகாமம் சந்தியின் இரு பகுதியிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வடிகால்கள் அமைக்கப் பட்டு அவை துப்புரவு செய்யப்படாத நிலையில் மூடிகளும் போடப்பட்டன.

அண்மைய மழையின் போது வடிகாலுக்குள் சென்ற வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுவதாகவும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அல்லது பிரதேச சபையினர் இந்த வடிகால்களை துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (வ-9)

# சீராகப் பெய்யாத மழை நீரிறைக்கும் விவசாயிகள்

தென்மராட்சி, நவ.9
தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, தனங்களப்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள காலபோக நெற்செய்கை வயல்களுக்கு தண்ணீர் இறைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

டிரக்டர் பெட்டிகளில் தகரபரல்களில் நீர் கொண்டு சென்று குழாய் மூலம் நீர் பாய்ச்சி வருகின்றனர்.

குறித்த பகுதிகளில் இன்னமும் நெற் பயிருக்கு போதுமான மழை வீழ்ச்சி இல்லாததால் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டியுள்ளதாக நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

ஓகஸ்ட் மாத மழையின் போது தாழ்வான வயல்களில் நெல் பயிரிட்டவர்களும் செப்ரெம்பர் மாத மழைக்குப் பின்னர் நெல் விதைப்பு செய்தவர்களுமே நீர் பாய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.



நெல் வயல்களில் விதைப்பு பணிகள் நடைபெற்று ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் களை பிடுங்கும் பணிகள் இடம்பெற வேண்டிய காலகட்டத்தில் மழையின்மை யால் நவம்பர் மாதத்தில் காலபோக நெற் செய்கைக்கான விதைப்புப் பணி இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# வெள்ள வாய்க்காலாக மாறிய பாதை



வரணி, நவ.9
வரணி, குடத்தனை பிரதான வீதியில் இதுவரை புனரமைக்கப்படாத காட்டுப் பகுதியில் பாதையின் குறுக்காக வெள்ளம் மேவிப் பாய்ந்து செல்வதால் மண் அள்ளுண்டு பெரிய குழிகள் ஏற்பட்டு அந்தப் பாதை தற்சமயம் வெள்ள வாய்க்காலாக மாறியுள்ளது.

"–"

அண்மையில் பெய்த மழை காரணமாக இந்தப் பாதைப் பகுதி நேறும் சகதியுமாக மாறியுள்ளது. இதன்போது டிரக்டர் உரிமையாளர்கள் சிலர் உடைந்த கட்டட இடிபாடுகள் மற்றும் உடைந்த ஓடுகள் ஆகியவற்றை அந்தப் பாதையில் போட்டுள்ளனர்.

மாரி காலத்தில் குறித்த பகுதியில் சுமார் 4 அடிக்கு மேல் வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகிறது. இதனால் இந்தப் பாதையூடான போக்குவரத்துத் தடைப்படும் நிலை ஏற்படுகிறது.

அண்மையில் பெய்த மழை காரணமாக இந்தப் பாதை சேறும் சகதியுமாக மாறியுள்ளது.

போதாக்குறைக்கு டிராக்டர் உரிமையாளர்கள் சிலர் உடைந்த கட்டட இடிபாடுகள் மற்றும் உடைந்த ஓடுகள் போன்றவற்றை தற்காலிகமாக அந்தப் பாதையில் போட்டுள்ளனர். எனவே குறித்த பாதை யின் அவலநிலையை வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு இந்தப் பகுதியில் ஒரு புதிய பாலம் அமைத்து பாதையைச் சீர்செய்து பயணிகளின் போக்குவரத்துக்கு உதவுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-122)

## நல்லூர் பிரதேச சபை நிறைவேற்றிய தீர்மானங்கள்

# 24 வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம், நவ.9
நல்லூர் பிரதேச சபை இணுவில், கோண்டாவில், கொக்குவில், ஆனைக்கோட்டை, அரியாலை, திருநெல்வேலி, கல்வியங்காடு, பிறவுண் வீதி பகுதிகளில் உள்ள 24 வீதிகளை உடன் திருத்தியமைக்கவுள்ளது.

ரூபா 10 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப் படவுள்ள இந்த வீதிகள் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்துக்கு முன்பாக பூர்த்தி செய்யப்படும் என பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். (வ-7)

# நீர் வளத்தைப் பாதுகாக்க குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.9
நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் உள்ள பரவைக் குளம், நந்தாவில் குளம், பூதவராயர்குளம் உட்பட அரியாலை பகுதியிலுள்ள சிறிய குளங்கள் அனைத்தையும் புனரமைப்புச் செய்து நீர்வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாகாண விவசாய அமைச்சருடன் தொடர்பு கொண்டு அதுகுறித்த பிரேரணையை கடந்த ஒக்ரோபர் மாதக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப தலைவர் திருமதி கோமதி ஐங்கரன் சமர்ப்பித்திருந்தார்.

குறித்த பிரேரணை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் மாகாண விவசாய அமைச்சருக்கு இது குறித்து தெரியப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

# இந்து மயான மதிலருகில் மாடிக்கு அனுமதியில்லை

யாழ்ப்பாணம், நவ.9
நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் இந்து மயானத்துக்கு தெற்கு பகுதியில் மதில் அருகில் நான்கு மாடிக் கட்டடம் அமைப்பதற்குப் பிரதேச சபை எந்த அனுமதியும் வழங்கவில்லை என நல்லூர் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் நான்கு மாடிக் கட்டடம் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கு பிரதேச சபையின் அனுமதி வழங்கப்பட்டதா என சபையின் உப தலைவர் திருமதி கோமதி ஐங்கரன் சபைக் கூட்டத்தில் எழுப்பிய கேள்விக்கு மேற் கண்டவாறு பதிலளிக்கப்பட்டது. (வ-7)

# சேமக்காலைக்கு சுற்றுமதில்

வலி.வடக்கு, நவ.9
சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலைக்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக எல்லைச் சுவர் இடிந்து வீழ்ந்ததால் பாது காப்பு அற்ற நிலையில் காணப்பட்ட புனித அந்தோனியார் சேமக்காலைக்கு சுமார் 2 லட்சம் ரூபா செல வில் புதிதாக சுற்றுமதில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (வ-86)

# அதிகமாகப் பயிரிடப்படும் சிவப்பு அரிசி இனம்

யாழ்ப்பாணம், நவ.9
இந்த வருட காலபோகத்தில் வடமாகாணத்தில் பி.ஜி.406 இன சிவப்பரிசி நெல்லினத்தையே அதிகளவு விவசாயிகள் பயிரிட்டுள்ளனர் என்று வடமாகாண கால்நடை மற்றும் விவசாய அமைச்சின் செயலாளர் எம். ஹால்டின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்ல விளைச்சலைத் தரக்கூடிய நெல்லினத்தை விவசாயிகள் அதிகளவு விதைப்பதற்கு ஆர்வம் காட்டி வரும் நிலையில் இந்த வருடம் வெளி மாவட்டங்களில் இருந்து தருவிக்கப்பட்ட பி.ஜி.406 இன சிவப்பு நாடு அரிசியையே அதிகளவு விதைப்புச் செய்துள்ளனர்.

காலபோகத்துக்கான விவசாய நடவடிக்கையை தற்போது விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் போதுமான விதைப்பு நெல் கமநல சேவைத் திணைக்களங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.


வடமாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் பரவலாக விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றார். (வ-14)

# மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 408 பேருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், நவ .9
யாழ்.மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 9 மாத காலப் பகுதிக்குள் மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 408 பேரிடமிருந்து 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது என்று யாழ்.மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ்.செந்தூர்ச்செல்வன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகம் உட்பட யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மதுவரிக் குற்றச் செயல்களாக சட்டவிரோதமாக அரச சாராயத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்தோர், பியர், கள் விற்பனை செய்தோர், சங்கங்களுக்கு வழங்காமல் மேலதிகமாக கள் வைத்திருந்தவர்கள், கஞ்சா விற்பனை செய்தவர்கள் என கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 408 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவற்றில் அரச சாரா யத்தை வீடுகளில் வைத்து விற்பனை செய்தமைக்காக 19 வழக்குகளும், பியர் விற்பனை செய்தமைக்காக 7 வழக்குகளும், வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்தமைக்காக 376 வழக்குகளும், கள்ளை விற்பனை செய்யாமல் மேலதிகமாக வைத்திருந்தமைக்காக 3 வழக்குகளும், கஞ்சா வைத்திருந்தமைக்காக 2 வழக்குகளும் அரச சாராயத்தை மேலதி கமாக வைத்திருந்த ஒரு வழக்கு என 408 வழக்குக ள் யாழ்ப்பாணம், ஊர் காவற்றுறை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட போது 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார். (வ-14)



அணுஆயுதங்கள் சுமந்து எதிரிகளின் இலக்கைத் தாக்கும் அக்னி 1 நடுத்தர ஏவுகணைச் சோதனையை இந்தியா நேற்று வெற்றிகரமாக நடத்தியது. ஒரிசா மாநிலம் வீலர் கடற்கரைப் பகுதியில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. (ற)

# தமிழர் பிரச்சினை குறித்து பேசமாட்டார் மன்மோகன்

## எந்த முகத்தை வைத்துக் கொண்டு போகமுடியும்? சாடுகின்றது பாரதிய ஜனதாக் கட்சி

புதுடில்லி, நவ.9
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு. இலங்கை செல்லும் இந்தியப் பிரதமர் மன்மோகன் தமிழர்களின் பிரச்சினை குறித்தா பேசப் போகின்றார்? - என்று சாடியுள்ளது பா.ஜ.க.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பதா? வேண்டாமா? என்பது குறித்து தமிழக பாரதிய ஜனதா தலைவர்களுடன் அந்தக் கட்சியின் தலைவர் ராஜ்நாத்சிங் ஆலோசனை நடத்தினார். அவருடனான சந்திப்பின் பின்னர் தமிழக பா.ஜ.க தலைவர் பொன். ராதாகிருஷ்ணன், இல. கணேசன் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு பா.ஜ.கவின் நிலைப்பாட்டைத் தெரித்தனர்.

"பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்பதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறோம். ஆனால் காலம் கடந்து விட்டது. தற்போது இலங்கையில் நடக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்பதுதான் தமிழ்நாடு பா.ஜ.கவின் நிலைப்பாடு. எங்கள் கட்சியின் சில தலைவர்கள் இந்த மாநாட்டுக்கு பிரதமர் போகலாம் என்று கருத்து தெரிவித்து இருப்பது உண்மை. ஆனால் அது அவர்களின் தனிப்பட்ட கருத்து. பிரதமர் இலங்கைக்கு சென்று அந்த மாநாட்டில் கலந்து கொண்டால் அங்கு இலங்கை தமிழர்களின்பிரச்சினைகளைத் தெளிவாக எடுத்துச்சொல்லலாம் என்று அவர்கள் கருதியிருக்கலாம்.

ஆனால், நம் பிரதமர் அங்கே போய் தமிழர்களின் பிரச்சினை குறித்தா பேசப் போகிறார்? கண்டிப்பாகப் பேசமாட்டார். எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவர் இலங்கையில்தமிழர்களின்பிரச்சினை பற்றிப் பேசமுடியும்? பிரதமர் அந்த மாநாட்டுக்கு போவது ஒட்டுமொத்த தமிழ் நாட்டையும் காயப்படுத்தும் காரியமாகும். இதனை எமது கட்சித் தலைவர் ராஜ்நாத்சிங்கிடம் தெரிவித்துள்ளோம்." என்று அவர்கள் தெரிவித்தனர். (ற)

## கர்வம் பிடித்தவர் நிதிஷ்

### நரேந்திர மோடி கடும் தாக்கு

ஜக்தல்பூர், நவ.9
பீஹார் முதலமைச்சர் நிதிஷ் குமார் கர்வம் பிடித்தவர் என்று தெரிவித்துள்ளார் பா.ஜனதா பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.

சத்தீஸ்கர் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போதே மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் பீஹார் தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற பா.ஜனதா தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில், மோடி பங்கேற்பதற்கு முன்னர் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்பில் 6 பேர் உயிரிழந்தனர். 80 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பீஹார் அரசு போதிய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளாததே குண்டுவெடிப்புக்குக் காரணம் என்று பா.ஜனதா கட்சி குற்றம் சாட்டியிருந்தது.

இந்நிலையில் இந்த சம்பவத்தை மறைமுகமாக குறிப்பிட்டுப் பேசிய மோடி, "நிதிஷ் குமார் எதிலும் அக்கறை காட்டாதவராக உள்ளார். பாட்னா குண்டுவெடிப்புக்கு பின்னர் அவரது உடல் மொழியே, அவர் குண்டு வெடிப்பு குறித்து சந்தோஷமாக இருந்ததைக் காட்டியது. குண்டுவெடிப்பு குறித்து நிதிஷ்குமாரிடம் கேள்வி கேட்டபோது அவர் கர்வத்துடன் நடந்துகொண்டார்." என்று கடுமையாகச் சாடினார்.

பீஹாரில் நிதிஷ்குமாரின் ஐக்கியஜனதாதளமும், பா.ஜனதாவும் கூட்டணி வைத்திருந்த நிலையில், மோடி பா.ஜனதாவின் தேர்தல் பரப்புரைக்குழு தலைவராக நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கூட்டணியை முறித்துக் கொண்டார் நிதிஷ் குமார். அப்போதிருந்தே மோடியும், நிதிஷ்குமாரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர். (ற)

## மனச்சாட்சியுடன் செயற்படுங்கள்

### இந்திய மத்திய அரசை வலியுறுத்துகின்றார் தி.மு.க. தலைவர் கருணாநிதி

சென்னை, நவ.9
இந்திய மத்திய அரசு மனச்சாட்சியுடன் நடக்க வேண்டும். இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் தி.மு.கவின் தலைவர் மு.கருணாநிதி.

இதுகுறித்து அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக் கணிக்க வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். தமிழகத்தின் உணர்வும் அதுதான். பிரதமர் மன்மோகன் சிங் மனச்சாட்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். இலங்கையில் நடைபெறும்பொது நலவாய மாநாட்டைப் புறக் கணிக்க வேண்டும்" என்று கோரியுள்ளார்.

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால், மத்திய அரசுக்கு வெளியில் இருந்து வழங்கும் ஆதரவையும் நிறுத்தப் போவதாக முன்னர் தி.மு.க. கூறியிருந்தது. (ற)

## பொய்யான வாக்குறுதிகளை வழங்குகிறது பா.ஜ.க.



புதுடில்லி, நவ.9
பாரதிய ஜனதாக் கட்சி பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து வருகின்றது என்று விமர்சித்துள்ளார் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி.


"காங்கிரஸ் கட்சி சொல்லாமல் பல சாதனைகளைச் செய்து வருகின்றது. ஆனால் சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த, மாநிலத்தை ஆளும் பாரதிய ஜனதா கட்சி தவறி விட்டது. பாரதிய ஜனதா கட்சி பிரிவினை அரசியலை நடத்துகிறது. காங்கிரஸ் கட்சி மக்களை ஒன்றிணைக்கிறது. மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றி வருகின்றது. பிற மாநிலங்களில் வறுமை குறைந்து கொண்டிருக்கும் நிலையில், சத்தீஸ்கர் மாநிலத்தில் வறுமை வளர்ந்து கொண்டிருக்கிறது" என்று தெரிவித்துள்ளார் சோனியா காந்தி. (ற)

## சட்டபூர்வ அமைப்பல்ல சி.பி.ஐ.

புதுடில்லி, நவ.9
மத்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. ஒரு சட்டபூர்வ அமைப்பு அல்ல என்று தீர்ப்பளித்துள்ளது கவுகாத்தி உயர்நீதிமன்றம்.

சி.பி.ஐக்கு எதிராக கவுகாத்தி உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகளின் முடிவிலேயே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

"சி.பி.ஐ. ஒரு சட்டப்பூர்வ அமைப்பு அல்ல. அதனால் சி.பி.ஐயை பொலிஸ்துறைக்கு நிகரான அமைப்பாகக் கருத இயலாது.



சி.பி.ஐ. அமைப்பு உருவாக்கத்துக்கான தீர்மானத்திற்கு இது வரை குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யும் உரிமை கூட சி.பி.ஐ.க்கு இல்லை" என்று தீர்ப்பு வழங்கியுள்ளது கவுகாத்தி நீதிமன்றம். (ற)



இந்தியாவுக்கு சென்றுள்ள இளவரசர் சார்ள்ஸ்ஸும் அவரது பாரியாரும் இமயமலை அடிவாரத்திலிருக்கும் ரிஷிகேஷ் நகரிலுள்ள கங்கை நதிக்கரையில் இந்துப் பக்தர்களுடன் சேர்ந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

## புகைத்தால் பறக்கும் வேலை: ராஜஸ்தான் அரசு அதிரடி

ஜெய்ப்பூர், நவ.9
இந்தியாவின் ராஜஸ்தான் மாநில அரச பணிகளில் சேருவோர் புகை பிடிக்கக் கூடாது என்று அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது அந்த மாநில அரசு.

இனிமேல் அரச பணிகளில் சேரும் இளைஞர்கள் புகை பிடிக்க மாட்டேன். குட்கா பயன்படுத்த மாட்டேன் என்ற உறுதிமொழியைத்தர வேண்டும். மீறுவோருக்கு கடும் தண்டனை வழங்கவும் ஆலோசிக்கப்படுகிறது.

அதற்கான அரசாணை அனைத்துத் துறைகள், ஆட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அத்துடன் மாநில ஆளுநருக்கும் இது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் இதனை செயல்படுத்தவும் அறிவுறுத்தியுள்ளது.

இதன் மூலம் இளைஞர்களிடம் தொடக்க நிலையிலேயே புகைபிடிக்கும் பழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே இப்படியான ஒரு முடிவு ராஜஸ்தானில் தான் முதல் முறையாக எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ற)

## தலிபான் அமைப்பின் தலைவராக பசுலுல்லா

இஸ்லாமாபாத், நவ.9
பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் புதிய தலைவராக முல்லா பசுலுல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஸ்வாட் பிராந்தியத்தில் இருந்து இயங்கி வரும் பசுலுல்லா மிகத் தீவிரமான தாக்குதல்களில் பங்கேற்றவர். குறிப்பாக பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுமி மலாலா மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு இவர்தான் காரணம் என்றும் கருதப்படுகிறது.

அந்த அமைப்பின் தலைவராகச் செயற்பட்ட ஹக்கி முல்லா மசூத் கடந்த வாரம் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் உயிரிழந்ததை அடுத்தே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள பசுலுல்லா மசூது சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல. அதனால் அந்த சமூகத்தைச் சேர்ந்த தலிபான் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவது அவருக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. (ற)



இந்த வருடத்தில் உலகின் மிகவும் பலம்வாய்ந்த சூறாவளியாக கருதப்படும் ஹய்யான் சூறாவளி பிலிப்பைன்ஸைத் தாக்க ஆரம்பித்துள்ளது. மணிக்கு 235 கிலோமீற்றர் என்ற வேகத்தில் வீசும் இந்த சூறாவளி பிலிப்பைன்ஸின் கிழக்கு கய்னன் பகுதியை தாக்க ஆரம்பித்துள்ளது. அதையடுத்து குறித்த பகுதியுடனான தொடர்புகள் அற்றுப் போய் இருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன. அந்தப் பகுதியில் சுமார் 47 ஆயிரம் மக்கள் பாதிப்படைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. எனினும் உறுதியான தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை. (ற)

புகுஷிமா அணுஉலை

## யுரேனியம் தகடுகளை அகற்றும் பணி ஆரம்பம்

டோக்கியோ, நவ.9
சுனாமி தாக்கியதால் பாதிக்கப்பட்டு செயற்படாதுள்ள புகுஷிமா அணு உலையில் உள்ள 1000 யுரேனியத் தகடுகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு ஜப்பானை தாக்கிய சுனாமியால் புகுஷிமா அணு உலை வெடித்து சிதறியது. அதையடுத்து அந்த அணு உலை முற்றிலுமாக மூடப்பட்டுள்ளது.

எனினும் எரிபொருளாக பயன்படுத்தப்படும் 1000 யுரேனியம் தகடுகள் அகற்றப்படாமல் அப்படியே இருந்து வந்தன.

தற்போது பலத்த பாதுகாப்புடன் 100 விஞ்ஞானிகள் அந்த தகடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ற)


# தாக்கி அழியுங்கள் அமெரிக்க 'டிரோனை'

## பாக். எதிர்க்கட்சியினர் ஆவேசம்

இஸ்லாமாபாத், நவ.9
பாகிஸ்தானின் இறையாண்மையைச் சீர்குலைக்க முயலும் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களை (டிரோன்) தாக்கி அழியுங்கள் என்று பாகிஸ்தான் அரசை வலியுறுத்தியுள்ளது அந்நாட்டு பிரதான எதிர்க்கட்சியான தெஹ்ரீக்-இ-இன்ஸாஃப்.

"அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதன் மூலமே பாகிஸ்தானின் இறையாண்மையில் அமெரிக்கா தலையிடுவதை நாம் விரும்பவில்லை என்பதை அந்நாட்டுக்குப் புரிய வைக்க முடியும்" என்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் ஆவேசமாகக் கூறியுள்ளார் தெஹ்ரீக்-இ-இன்ஸாஃப் கட்சியைச் சேர்ந்த ஷிரீன் மஸாரி.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அதே கட்சியைச் சேர்ந்த தரிகுல்லா, "அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களை வீழ்த்தும் அனைத்துத் தகுதிகளையும் பாகிஸ்தான் இராணுவம் பெற்றுள்ளது. அதற்கான ஆணையை அரசு பிறப்பித்தால் அதனை நிறைவேற்றுவோம் என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அரசு அதற்கான உத்தரவை இராணுவத்துக்கு வழங்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.




அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் பாகிஸ்தானியர்கள்

கடந்த மாதம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்பும், ஆளில்லா விமானத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தார். இந்தநிலையில் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்ப ஆரம்பித்துள்ளது. (ற)

## மக்களிடம் மன்னிப்பு கோரினார் ஒபாமா

நியூயோர்க், நவ.9
'ஒபாமா கேர்' மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளுக்காக அமெரிக்க அதிபர் ஒபாமா அந்த நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் மக்களின் முந்தைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களில் பாதிப்பு ஏற்படாது என்று ஒபாமா உத் தரவாதம் அளித்திருந்தார். ஆனால் தற்போது சிலருக்கு முந்தைய காப்பீட்டுத் திட்டங்கள் காலாவதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதையடுத்தே ஒபாமா நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். (ற)

பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டால்


## மோடியுடன் இணைந்து அமெரிக்கா செயற்படும்

நியூயோர்க், நவ.9
இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி தேர்வு செய்யப்பட்டால் அவருடன் இணைந்து பணியாற்றத் தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வொஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"மோடிக்கு விஸா வழங்குவது குறித்த பிரச்சினையை ஊடகங்கள்தான் மிகைப்படுத்தி வருகின்றன. இது அமெரிக்காவைப் பொறுத்தவரை பெரிய பிரச்சினையல்ல. அமெரிக்காவின் விஸா கோரி மோடி விண்ணப்பித்தால் அதனை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் யார் ஆட்சிக்கு வந்தாலும், அவர்களுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயாராகவே உள்ளது. காங்கிரஸ்கட்சி ஆட்சிக்கு முன்னர் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தபோதும், இந்தியாவுடன் நல்லுறவு பேணப்பட்டது. நரேந்திர மோடி குறித்த கவலை அமெரிக்க அரசிடம் பெரிய அளவில் இல்லை" என்று தெரிவித்துள்ளார் அந்த அதிகாரி. (ற)

## அதிர்ச்சியில் ஆழ்த்திய திருமண 'கேக்'



நியூயோர்க், நவ.9
அமெரிக்காவில் நடைபெற்ற திருமண விழா ஒன்றில் மணமக்களின் முக சாயலில் தயாரிக்கப்பட்ட 'கேக்' விழாவிற்கு வந்திருந்தவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அமெரிக்காவில் டெக்சாஸ் பகுதியைச் சேர்ந்த டேவிட் சைடுசெர்ப்-நதாலே என்ற இளம் தம்பதியர் தங்களது திருமண 'கேக்'கை வித்தியாசமான முறையில் உருவாக்கியுள்ளார்கள். அதில் மணமக்களின் முக சாயலில் ஆண்-பெண் துண்டிக்கப்பட்ட தலைகள் உருவுடன் 'மரணம் வரையில் எங்களுக்குள் பிரிவு இல்லை' என்ற வாசகத்தையும் எழுதி வைத்துள்ளனர்.

இதுகுறித்து மணப்பெண் நதாலேயே கூறுகையில், எனது கணவர் திகில் சினிமாப்பட தீவிரரசிகர். அவரை மகிழ்விக்கவே இதைத் தயாரித்தேன் என்று கூறியுள்ளார். அதனைத் தயாரிப்பதற்காக 40 மணி நேரம் செலவிடப்பட்டதாம். (ற)

## அமெரிக்க உளவு நடவடிக்கை: அதிர்ச்சியில் ஜப்பான்

டோக்கியோ, நவ.9
ஜேர்மனி, பிரேஸில் ஆகிய நாடுகளின் வரிசையில் நட்பு நாடான ஜப்பானிலும் அமெரிக்க உளவு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன என்று வெளியாகியுள்ள தகவல்களை அடுத்து கடும் விசனம் வெளியிட்டுள்ளது ஜப்பான்.

அமெரிக்காவின் பிரபல இணையத்தளம் ஒன்றில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தால் 2007 ஆம் ஆண்டு உளவு பார்க்கப்பட்ட நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் அமெரிக்காவின் நட்பு நாடான ஜப்பானும் இடம் பெற்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் இட்ஸ்னோரி ஒனோடேரா "இது ஒரு நயவஞ்சகத்தனமான செயல். வெளியான செய்திகளை வைத்து பார்க்கும் போது என்.எஸ்.ஏ. உளவு பார்த்துள்ளமை தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில் அமெரிக்க அரசு நேரடியாக இதில் ஈடுபடவில்லை என்றாலும் இது விரும்பத்தக்க ஒன்று அல்ல. இந்த செயல் இருநாடுகளின் நட்புறவையும் பாதிக்கக் கூடிய ஒன்றாகும்" என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உளவு நடவடிக்கை தொடர்பில் பிரான்ஸ், ஜேர்மனி, மெக்ஸிகோ ஆகிய நாடுகள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ள நிலையில் தற்போது அந்தவரிசையில் ஜப்பானும் இணைந்துள்ளது. (ற)

## பொது மண்டபத்துக்கு இன்று அடிக்கல்

வேலணை, மண்கும்பானில் பொதுமண்டப மொன்று அமைப்பதற்கான பணிகள் மேற் கொள்ளப்படவுள்ளது.

நயினாதீவுக்கு வருகை தரும் மக்கள் தங்குவதற்காக இந்த மண்டபம் அமைக்கப்பட வுள்ளது. மண்டபத்துக்கான அடிக்கல் பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவால் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடப்படும். (வ-7)

## பாரதி விழா

தென்மராட்சி இலக்கிய மன்றத்தின் பாரதி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை. மாலை நிகழ்வுகளாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

கல்லூரியின் பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் காலை நிகழ்வில் "பாரதியைப் பயில்வோம்" என்னும் நூல் வெளியீடும், பட்டி மன்றமும் இடம்பெறும். கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் மாலை நிகழ்வில் மன்றத்தின் ஆன்றோர் கௌரவிப்பு நிகழ்வாக சோதிடபூசணம் மட்டுவில் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் கௌரவிக்கப்பட வுள்ளார். (ந-9)

## பொதுக்கூட்டம்

குருநகர் பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு குருநகர் பிரதேச வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

குருநகர் பிரதேசத்திலுள்ள இந்த வைத்திய சாலையின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள நலன் விரும்பிகள் கூட்டத்தில் கலந்துகொண்டு நடப்பு வருட நிர்வாகிகளைத் தெரிவு செய்ய உதவுமாறு வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.விமலேந்திரன் தெரிவித்துள்ளார். (ந-51)

## வாசிப்பு மாத இறுதிநாளும் பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும், பரிசில் வழங்கலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபை உறுப்பினர்களான ச.தங்கராசா, இ.ஜானகி, ஜெ.சிற்சபேசன், செயலாளர் செல்வி தி.தர்சினி, சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கைதடிப் பிரதேச பாடசாலைகளின் அதிபர்களும் கலந்துகொள்வர். தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, சித்திரம், கட்டுரை, சிறுகதைப் போட்டிகளிலும், முன்பள்ளி சிறார்களிடையே நடத்தப்பட்ட நிறந்தீட்டல் போட்டியிலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்பட வுள்ளன. (ந-9-122)

**NSB National Savings Bank**

**மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளைகளில் **30.06.2012** வரையிலும் அடகு வைத்து, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாத நகைகள் **(16/11/2013) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு** அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**கிளை விவரம்:**
01. சாவகச்சேரி
02. காரைநகர்
03. கிளிநொச்சி
04. பருத்தித்துறை

இந்த ஏலவிற்பனையை இரத்துச்செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

பிராந்திய முகாமையாளர் (வடக்கு),
தேசிய சேமிப்பு வங்கி.

**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 2013 பரிசளிப்பு விழாவும் பாராட்டும்**

இன்றைய நிகழ்வில் பரிசில்பெறும் சாதனையாளர் வரிசையில் 2011/ 2013 பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 43 மாணவிகளையும் க.பொ.த (உ/த) 2012 மற்றும் க.பொ.த (சா/த) 2012 இல் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய மாணவிகளையும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கோட்ட, வலய மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் முதன்மை நிலைகளைப் பெற்ற சாதனையாளர் உட்பட இன்றைய நிகழ்வில் பரிசில் பெறும் மாணவர்கள் அனைவரையும் அவர்களது தேர்ச்சிக்குப் பின்புலமான அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் அகமகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

(40001)(2.6.3) - **பழைய மாணவர்கள்.**

**அலுவலக இணைப்பாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு அலுவலக இணைப்பாளர் தேவை. சிங்களம் நன்கு பேசக் கூடிய ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்த பெண்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் முகவரிக்கு நாளை (10.11.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்.

IVA Paramedical Campus
இல.323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 071 060 0600, 071 598 0980, 071 872 2353
(C/13597)(3.6.4)

**மணமகள் தேவை** யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த சொந்த தொழில் புரியும் 63 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள்தேவை. தாரமிழந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:077 234 0167
(39830)(3.6.4)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள, நீலநிற, WR-xxxx YAMAHA FAZER மலிவு விலையில் (விலை 235000/=)
தொடர்பு:077 910 7151
A.G.செல்வம், (39816)(3.6.4)
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

ரக்ரர், பெட்டி, தண்ணீர் தாங்கி கவேஸ்ரர் ஆகியன விற்பனைக்கு.
தொடர்பு: 077 614 0955
(29600)(3.6.4)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979 பூரம் முதலாம் பாதம், செவ்வாய் 7 (புள்ளி 8) மொத்தக் கிரகபாவம் 48, கனடா PR உடைய மண மகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: விளம்பர இல. 4475, C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39829)(3.6.4)

**வீடு வாடகைக்குண்டு**

பொற்பதி வீதி, கொக்குவிலில் ஐந்து பரப்பு விஸ்தீரணம் கொண்ட விசாலமான நிலப்பரப்புடனும், அழகானதும் அமைதியானதுமான சூழலில் எட்டு அறைகளுடனும், தரிப்பிட வசதியுடனும் அமைந்த மேல்மாடிவீடு வாடகைக்குண்டு. தனியார் நிறுவனங்களுக்கும், நிறுவனம் சார் அமைப்புகளுக்கும் முன்னுரிமை உண்டு.
தொடர்பு: 011 273 0374/011 272 2750

**வீடு விற்பனைக்கு**

இருபாலைச்சந்தியில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(39816)(3.6.4) T.P: 077 222 0108

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

வவுனியா, கோயில் குளம் பகுதியில் ஆசிரியை ஒருவரின் வீட்டில் தங்கி நின்று 05 வயது மற்றும் 03 வயது குழந்தைகளை பராமரிப்பதுடன் வீட்டு வேலைகளை செய்யக் கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.மாத சம்பளம் 10,000/= தரப்படுவதுடன் உணவு, தங்குமிடம் இலவசம்
தொடர்புகளுக்கு:
(29840)(3.6.4) 077 772 2754

**திருமண சேவை**

டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், வர்த்தகர்கள், பாவம் கூடிய குறைந்த சூரியன், செவ்வாய், வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும், விவாகரத்துப் பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.
தொடர்பு:காலக்கண்ணன் திருமணசேவை.
இல.135/3, கோயில் வீதி, நல்லூர்.
T.P:077 607 0862 (39824)(3.6.4)

**Softlogic உடன் பண்டிகை கால குதூகலத்தில் இணையுங்கள்.**





எங்கும் இல்லாத சவால்!

எங்கும் இல்லாத சுப்பர் சொய்ஸ்!



- பழைய வேலை செய்யாத TV இக்கு 5000/= விலைக் கழிவு.
- மொத்த விலைக்கு 7500/= விலைக் கழிவு.
- மொத்த விலைக்கோ, வட்டி இல்லாத தவணைக் கொடுப்பனவுக்கோ கொள்வனவு செய்யும் ஒரு TV இக்கு Panasonic DVD Player + Panasonic Rice Cooker அல்லது ஒரு Tostor இலவசம்.








Toaster

புதிய Panasonic 32" TV ஒன்றை 10,999/= மாத்திரம் முற்பணமாக செலுத்தி வட்டியில்லாத 12 மாத கால தவணைக் கொடுப்பனவு முறையில் பெற்றுக் கொள்ளுங்கள்.
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
(C/13600) (7.6.3)

**உடனே விரையுங்கள்:**
**இல. 63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 567 1108, 077 739 9929**

**தென்னிந்திய யாத்திரை**

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளுக்காக சேவை நலன் கொண்டு குறைந்த செலவில் நடத்தப்படுகின்றது.

இது தமிழ் நாடு யாத்திரை:
நாள்கள் 08, யாத்திரீகர்கள் 10 பேர், ஆரம்பம்: 20.11.2013, நிறைவு : 28.11.2013

தரிசிக்கும் ஆலயங்கள்: மலைக்கோட்டை விநாயகர், திருத்தணி முருகன், சுவாமிமலை முருகன், பழனி முருகன், திருச்செந்தூர்முருகன், பழர்முதிர்சோலை முருகன், திருப்பரம் குன்றம் முருகன், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், அழகர் கோயில், கறுப்புசுவாமி கோயில் , நாகாத்தம்மன், ஸ்ரீரங்கம் விஷ்ணு, சீரடி பாபா சென்னை, கபாலீஸ்வரர் சிவன், பார்த்தசாரதி விஷ்ணு, அஸ்டலெட்சுமி, ஆறுபடைமுருகன் ஒரே இடத்தில், திருவானைக்கால் சமயபுரம், காஞ்சி காமாட்சி, காஞ்சி வரதராஜப் பெருமான், வேலூர் பொற்கோயில், வடபழனி முருகன், கோலவாமணப் பெருமான், நேரமிருந்தால் வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம். ஒரு நாள் சொப்பிங்

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:**

இருவழி விமான டிக்கட், மூன்று வேளை உணவு, காலை காப்பி பலகாரம், மத்தியானம் சுத்தமான சைவ உணவு சாதம், 4 மணிக்கு காப்பி, ரீ-இரவு காப்பி பலகாரம் யாத்திரை முடியும் வரை அ.இ வாகன வசதி தங்குமிடங்கள் 2 பேருக்கு கட்டில் மெத்தை, சுடு தண்ணீர் உடன் கூடிய (குளியல் அறையுடன் கூடிய ரூம்கள்) எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். நாள் ஒன்றிற்கு ஒவ்வொருவருக்கும் 1லீற்றர் மினரல் வாட்டர் இவை அனைத்தும் எமது சேவை.

முக்கிய கவனிப்பு: பாஸ்போட் இல்லாதவர்கள் பாஸ்போட் எடுக்க கொழும்பு வந்தால் காரியாலயம் அழைத்துச் சென்று அதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும். எமது யாத்திரைகளில் கலந்து கொள்பவர்களுக்கு மட்டும் இந்த சேவை. (செலவுகள் தங்கள் பொறுப்பு) குறிப்பிடும் ஆவணங்களுடன் நேரில் கொழும்பு வரவேண்டும்.

கட்டண விபரம் கேட்டு அறிந்து கொள்க

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் (C/13738)(3.6.4)

Office: City Center Shopping Complex, 3rd Floor,
No. 59, C 3/3, Sea Street, Colombo-11
Tel: 077 7680102, 072-422 2989, 077 736 2154 Web: www.sridevipilgrims.com

| யாழ்ப்பாணத்தில் | சென்ற யாத்திரைகளில் கலந்து கொண்டவர்கள் | யாழ்ப்பாணத்தில் |
|---|---|---|
| M.குமாரசிங்கம் | மட்டக்களப்பில் K.ராஜகோபால் Tel: 065 365 3719 | V.மனோகரன் |
| 021 320 6314, 075 614 4476. | திருகோணமலை திரு.T.சிவபாலன் Tel:077 729 3271 | 021 222 8730, 077 836 6670. |

## துணுக்காய்ச் சந்தையில் துரித நிர்மாணப் பணிகள்



துணுக்காய்ப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மல்லாவிப் பொதுச் சந்தையின் இரண்டு மாடிக் கட்டட வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.
இந்தக் கட்டட வேலைகள் நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் 27 மில்லியன் ரூபா செலவில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துணுக்காய்ப் பிரதேச சபையின் தொழில் நுட்ப அதிகாரியின் மேற் பார்வையின் கீழ் சந்தைக் கட்டடத்துக்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-415)

# 7,500 பேரின் அவயவங்களை முல்லைத்தீவில் பறித்தது போர்

## மாற்றுத் திறனாளிகள் சங்கம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, நவ.9
முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு உடல் அவயவங்களை இழந்து சுமார் 7 ஆயிரத்து 500 பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கம் தெரிவித்துள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 11 ஆயிரம் பேர் வரையில் மாற்றுத் திறனாளிகளாக, - அங்கவீனர்களாக - உள்ளனர். இதில் 7 ஆயிரத்து 500 பேர் வரையில் கடந்த போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் பிறப்பு, நோய்களின் பாதிப்பு மற்றும் விபத்துக்கள் காரண மாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் கருத்துத்தெரிவிக்கும்போது: குறித்த மாற்றுத் திறனாளிகள் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு பல்வேறு வகையான உதவிகள் தேவையாக உள்ளன.
தற்போது மாதாந்த நிவாரணம் ஒன்றினை வழங்குமாறு எமது சங்கத்தினூடாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.
இதனைவிட இவர்கள் நிலைத்து வாழக்கூடிய வாழ்வாதார உதவிகளையும் கோரியுள்ளோம்.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் உள்ள மாற்றுத் திறனாளிகள், தமக்கு இந்தப் பகுதியில் கால்நடைப் பண்ணை மற்றும் பால் பதனிடும் நிலையம் ஆகியவற்றை அமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இவற்றை வழங்கும் போது அவர்களின் வாழ்வாதாரம் வளர்ச்சியடையும் என்றார். (க-6)

## பதக்கம் சூட்டும் விழா

வவுனியா, நவ.9
வவுனியா சைவப் பிரகாச மகளிர் ஆரம்பப் பாடசாலையில் சுற்றாடல் சிறுவர் கழக உறுப்பினர்களுக்கு பதக்கம் சூட்டும் விழா நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி க.நந்தபாலன் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜாவும், சிறப்பு விருந்தினராக வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜும் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் சுற்றாடல் சிறுவர் கழகத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்குச் சின்னம் சூட்டப்பட்டதுடன், கல்வியில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.
மேலும் இந்த நிகழ்வில் ஓர் அங்கமாக மரங்கள், வீட்டுத்தோட்ட மரக்கறிக் கன்றுகள் என்பன கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.
இந்த நிகழ்வின் போது உரையாற்றிய பிரதம விருந்தினர் குறித்த கல்லூரி கல்வித் துறையில் முன்மாதிரியாக விளங்குதாகவும், சுற்றாடல் சிறுவர் கழகம் சிறப்பாக இயங்குவதாகவும் குறிப்பிட்டார்.
(க-402)



முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று கடந்த திங்கட்கிழமை ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், வடமாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்களான து.ரவிகரன், வீ.கனகசுந்தரசுவாமி, அன்ரனி ஜெகநாதன், திருமதி மேரி கமலா குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் முடிவில் ஒட்டுசுட்டான் விதை நெல் சுத்திகரிப்பு நிலையத்தையும் அமைச்சர் சென்று பார்வையிட்டார். (க-5)

# சந்தேக நபருக்கு பிணை அனுமதி

கிளிநொச்சி, நவ.9
கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் உபகரணங்களை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர் ஒருவரை பிணையில் செல்வதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் அனு மதி வழங்கியுள்ளது.
கிளிநொச்சிப் பகுதியில் சுமார் 26 ஆயிரத்து 250 மில்லி லீற்றர் கசிப்பையும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களையும் வைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.
மேலும் குறித்த சந்தேக நபரையும் அவரிடம் இருந்து கைப்பற்றியதாகக் கூறப்படும் சான்றுப் பொருள்களையும் கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தியிருந்தனர்.
சந்தேக நபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி குறித்த நபர் சுற்றவாளி என மன்றுக்குக் கூறியதையடுத்து விசாரணைகளுக்குத் தவணையிட்டுள்ளதுடன் சந்தேக நபரை ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும் அதே தொகைக்கான ஆள்பிணையிலும் செல்வதற்கு நீதிமன்றம் அனு மதி வழங்கியது. (க-6)

## புதுக்குடியிருப்பு மாணவருக்கு சமூகவிழுமியக் கருத்தரங்கு

புதுக்குடியிருப்பு, நவ.9
சமூக விழுமியங்களை மாணவர்களுக்குப் பரப்புதல் தொடர்பாக இடம்பெற்ற கருத்தரங்குகள் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கலாசார கிளையினர் புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கருத்தரங்குகளை நடத்தினர்.
தரம் ஒன்பதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாய் அமைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பண் பாடு, கலாசாரம், பாலியல் பிரச்சினைகள், சவால்களை எதிர்கொள்ளும் விதம் என்பவை தொடர்பாக இந்தக் கருத்தரங்குகள் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தியதாகக் கலாசார உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.
பாரதிபுரம், விசுவமடு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, குரவில் அ.த.க. பாடசாலை, வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.
அண்மையில் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் அதிபர் ஆர்.பேரின்பராணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கலாசார உத்தியோகத்தர் எஸ்.பிரதீபன், சிறுகைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சஞ்சீவன், உளவள ஆலோசகர் எஸ்.முகுந்தன், ஆலோசனையும் வழிகாட்டலும் ஆசிரியர் சி.மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்கை நெறிப்படுத்தினர். (க-555)

# மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த மாகாண அமைச்சர்

மன்னார், நவ .9
மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 4 ஆம் திகதி காலை மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இடம் பெற்றுள்ளது.
இதில் வட மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தகம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரும் சட்டத்தரணியுமான பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார்.
இங்கு மன்னார் மாவட்ட மீனவர்கள் அனுபவித்து வருகின்ற துன்ப துயரங்கள் தொடர்பாக சமாசத்தின் செயலாளர் எஸ்.நிக்சன் அமைச்சருக்கு தெரியப்



படுத்தி விளக்கினார்.
இந்திய படகுகளின் அத்துமீறிய வருகையால் சிறுதொழில் மீனவர்களின் நாளாந்தத் தொழிலில் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், அத்துடன் மீன்பிடி உபகரணங்களின் விலை ஏற்றம் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளதாகவும் தெரிவித்தார்.
இதனைத் தொடர்ந்து அமைச்சர் உரையாற்றுகையில்:-
மீனவ சமூகங்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டும். அதனூடாகவே அபிவிருத்தி நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற் கொள்ள முடியும்.
இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து ஒரு ராஜதந்திர முடிவினை பெற்றுத்தருவதில் முனைப்பாகச் செயற்படுவேன்.
இலங்கையில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை நமது மீனவர்களும் நிறுத்தவேண்டும். கடல் வளங்கள் வெகுவாக அழிந்துகொண்டு செல்லும் அபாயம் இருப்பதனால் எதிர்காலத்தில் வேறு நாடுகளில் இருந்து உணவுக்காக மீனை நாம் கொள்வனவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இதனை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் எதை விட்டு விட்டுச் செல்லப் போகின்றோம் என சற்றுச் சிந்தியுங்கள்.
எதிர்காலத்தில் மீனவர்களின் அபிவிருத்தி தொடர்பில் நான் அக்கறையுள்ளவனாக இருப்பேன்-என்றார். (க-12)

# அதிவேக தபால் சேவை மட்டக்களப்பில் ஆரம்பம்



மட்டக்களப்பு, நவ.9
மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிவேக தபால் சேவை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதலாவது அதிவேக தபாலை மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தக நலன்புரி அமைப்பின் தலைவர் கே. எம்.கலீல், கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபரிடம் வழங்கி சேவையை ஆரம்பித்து வைத்துள்ளார்.

மட்டக்களப்பு பிரதம அஞ்சல் அலுவலகத்தில் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வாசுகி அருள்ராஜ் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், சிரேஷ்ட நிர்வாகச் செயலர் கே.கனக சுந்தரம், மட்டக்களப்பு பிரதம தபால் அத்தியட்சகர் ஏ.எம். ஜிப்ரி, மட்டக்களப்பு முஸ்லிம் வர்த்தக நலன்புரி அமைப்பின் தலைவர் கே.எம்.கலீல் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

*தபால் சேவையை துரிதப்படுத்தும் வகையில் நாடெங்கும் விசேட வாகனங்கள் மூலம் அதிவேக தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

## பிரதமர் மன் மோகன் கிழக்கு வர வேண்டும்

### முதல்வர் அழைப்பு

மட்டக்களப்பு, நவ.9
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வரும் போது கிழக்கு மாகாணத்துக்கும் வருகை தர வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் அழைப்பு விடுத்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு விடுத்துள்ள அழைப்பை வரவேற்றுள்ள கிழக்கு மாகாண முதல மைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாணத்துக்கும் அவர் வருகை தர வேண்டும் என் பதே எமது எதிர்பார்ப்பு என்று கூறியுள்ளார்.

இதேவேளை போருக்கு பின்னர் வட மாகாண நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்கு வருமாறு இந்தியப் பிரதமருக்கு வடமாகாண முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளது போல் கிழக்கு மாகாண முதலமைச்சரும் அழைப்பு விடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தண்டாயுதபாணி கூறினார்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரை இந்திய உதவியுடன் அமைக்கப்படும் சம்பூர் அனல் மின் உற்பத்தி நிலையத்தால் தமது பூர்வீக நிலங்களையும் வாழ்விடங்களையும் இழந்துள்ள சம்பூர் பிரதேச மக்கள் குறித்து இந்தியா கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடு உள்ளதுஎன்று அவர் கூறினார். (ச)





## மூன்று பேருக்கு பிடியாணை

அம்பாறை,நவ.9
அம்பாறை, தமண பிரதேசத்தில் சட்டவிரோதமாக கசிப்பு மற்றும் மதுபானம் விற்பனை செய்த மூன்று பேர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வி எம்.எஸ். பிரிங்கி பிடியாணை பிறப்பித்து அவர்களை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த மூன்று பேரையும் கடந்த சனிக்கிழமை தமண பொலிஸார் கைது செய்த பின்னர் புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு அவர்களை பிணையில் பொலிஸார் விடுவித்தமை குறிப்பிடத்தக்கது.

## ரூ.4000 அபராதம்

அம்பாறை,இறக்காமம் பிரதேசத்தில் 'சீல்' வைக்காத நிறுவை தராசு படிக்கல்லுடன் வியாபாரத்தில் ஈடுபட்ட இருவருக்கு 4 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத் துமாறு அம்பாறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வி எம்.எஸ். பிரிங்கி புதன்கிழமை உத்தரவிட்டார்.

தமண பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து இறக்காமம் மற்றும் வாப்பொத்தான் சேனை பிரதேசங்களில் உள்ள குறித்த இரு வர்த்தக நிலையங்களை பொலிஸார் முற்றுகை யிட்டு சோதனையிட்டபோது நிறுவை தராசு படிக்கல்லுக்கு 'சீல்' வைக்காது அதனைப் பயன் படுத்தி வர்த்தகத்தில் ஈடுபட்ட இருவரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

இவர்கள் புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே தலா 4 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(ச)



மூதூர் தெற்கு பிரதேசத்திலுள்ள பாரதிபுரம் கிராமத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு உலர் உணவு பொதிகளை திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா புதன்கிழமை பாரதிபுரம் பாலர் பாடசாலையில் வைத்து வழங்கினார்.

## மின்சாரம் பெற்ற ஆறு பேர் கைது

மட்டக்களப்பு, நவ.9
திருக்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஆறு பேர் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர் என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்ட மின்சார சபையினர் திருக்கோவில் பொலிஸாருடன் இணைந்து நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிக்கு திருக்கோவில், கள்ளியம்தீவு பிரதேசங்களைச் சுற்றி வளைத்து சோதனையிட்ட போதே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற ஆறு பேரை கைது செய் தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய் யப்பட்டவர்களை பொத்துவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## விபத்தில் மூவர் காயம்

ஏறாவூர்,நவ.9
மட்டக்களப்பு, பிள்ளையாரடியில் வியாழக் கிழமை காலை இடம் பெற்ற வாகன விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் பஸ்ஸிம் மோட்டார் சைக்கிளும் மோதுண்டே இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போனதா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.முருகானந்தன் தெரிவித்தார்.

இந்த விபத்துக் குறித்து மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு



மட்டக்களப்பு, நவ.9
மழைக்காலம் ஆரம்பமாகியுள்ளதனால் மட்டக்களப்பு நகரில் டெங்கு பரவும் இடங்களாக அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் வடிகான்களை துப்புரவு செய்யும் பணியில் மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர்கள் வியாழக்கிழமை ஈடுபடுபட்டனர்.

மட்டக்களப்பு மாநகர சந்தை சதுக்கம், ஆற்றின் படுக்கைகள், மாநகர வீதிகளின் வடிகான்கள், நீர் தேங்கி நிற்கும் இடங்கள் ஆகியன சீர்செய்யப்பட்டன.

இதேவேளை டெங்கு பற்றிய விழிப்புணர்வூட்டும் நடவடிக் கைகளில் மாநகர சபையுடன் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போலி ஆவணங்களை சமர்ப்பித்தோர் சிக்கினர்

மட்டக்களப்பு, நவ.9
போலி ஆவணங்களை சமர்ப்பித்து தம்பலகாமம் மற்றும் கந்தளாய் பிரதேச செயலகங்களில் பணிபுரிந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையிலேயே அவர்கள் கைதாகியுள்ளனர்.

சந்தேகநபர்கள் திருகோணமலை மற்றும் தோப்பூர் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர்கள் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரால் வழங்கப்பட்டதாக கூறப்பட்ட, போலி ஆவணங்களை சமர்ப்பித்து கடந்த 2011.10.25 ஆம் திகதியில் இருந்து குறித்த பிரதேச சபைகளில் பணி புரிந்து வரு கின்றனர்.

ஆவணங்களில் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து தம்பலகாமம் மற்றும் கந்தளாய் பிரதேச செயலர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவை போலியானது என்று தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து கந்தளாய் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, கடந்த 5 ஆம் திகதி ஒருவரும் 6 ஆம் திகதி மற்றைய நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நபர்களை கந்தளாய் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, அவர்களை எதிர் வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட் டுள்ளது. (ச)

# சர்வதேச போர்க்குற்ற விசாரணையை கொழும்பு மாநாட்டில் வலியுறுத்துவேன்!

## பிரிட்டன் தமிழ்ச் சமூகத்திடம் கமரூன் வாக்குறுதி



இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் வலியுறுத்துவேன் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் உறுதியளித்துள்ளார்.

பிரிட்டிஷ் தமிழ்ச் சமூகத்திடம் அவர் இந்த உறுதிமொழியை நேற்று வழங்கியுள்ளார் என்று ஏ.எவ்.பி. றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க வலியுறுத்தும் தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகியும் மோசமான போர்க் குற்றங்கள் மற்றும் பாலியல் வன்முறைகள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகின்றனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் இன்னமும், காணாமற்போன தமது உறவுகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

நான் அங்குள்ள நிலைமைகளைப் பார்க்க வேண்டும். பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதால் அதைச் செய்ய முடியும் என்று நம்பவில்லை. அதைச் செய்வதற்கு சரியான வழி அங்கு செல்வதே.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக வெளிப்படையானதும், சுதந்திரமானதுமான அனைத்துலக விசாரணையை நடத்த வேண்டும் என்று அங்கு கோரவுள்ளேன் - என்றார்.

# வெறும் நான்கு நாள் கூத்துக்காக 4 தலைமுறைகள் அடைவு வைப்பு

## அரசைச் சாடுகிறது அதிகாரப் பகிர்வு அமைப்பு

"நான்கு நாள் கூத்துக்காக நான்கு தலைமுறை மக்களை அரசு அடைவு வைத்துள்ளது" என அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்து வோம் அமைப்பு குற்றம்சுமத்தியுள்ளது.

"பொதுநலவாய மாநாட்டிற்காக புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட அதி சொகுசுக் கார்களினால் சுங்கத்திணைக்களத்திற்கு 758 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது" எனவும் இவ்வமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினருமான அஸாத் ஸாலி தெரிவித்ததாவது-

"அரசு மக்களை கஷ்டத்துக்குட் படுத்தி நடத்துகின்ற நிகழ்வே இந்த பொது நலவாய மாநாடு. இம்மாநாட்டின் வரவேற்பு நிகழ்வுக்காக 50 மில்லியன் ரூபாவையும், 4 நாள்கள் நடைபெறவிருக்கும் கண்காட்சிக்காக 50 மில்லியன் ரூபாவையும் அரசு செலவு செய்யவுள்ளது.

இப்படியான அரசின் செயற்பாடுகள் நாட்டுக்கு இலாபகரமானவையா அல்லது நட்டமளிப்பவையா என்பதை மக்களே உணர்ந்து கொள்ளட்டும். இதனால், அமைச்சர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு, பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறை, விவசாயிகளுக்கு உரமின்மை என நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படுகின்ற இந் நிலையில் நடைபெறவிருக் கும் பொதுநலவாய மாநாடானது மக்களை மேலும் துன்பத்துக்குள் தள்ளியுள்ளது.

நான்கு நாள்கள் நடக்கவிருக்கின்ற இம்மாநாட்டிற்காக நாட்டின் நான்கு தலைமுறை மக்களை அரசு அடைவு வைத்துள்ளது.

இதற்காக தற்போது புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட கார்களால் சுங்கத் திணைக்களத்திற்கு 758 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. இப்படியான அரசு தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதல் வர் விக்னேஸ்வரனை குறை கூறிக்கொண்டிருப்பது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

அரசு எப்படியான ஏமாற்று வேலைகளைச் செய்தாலும் சர்வ தேசத்திடம் உறுதியளித்த 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் அரசுக்கு நிச்சயமாக ஆபத்து காத்துக் கொண்டிருக்கின்றது" என்றார்.

# குழந்தை பெற்றெடுத்த பாடசாலை மாணவி

## காதலன் கைது

காலி - மஹமோதர வைத்தியசாலையில் 15 வயது பாடசாலை மாணவி ஒருவர் குழந்தை பெற்றெடுத்த சம்பவம் தொடர்பில் அவருடைய காதலன் கைது செய்யப்பட் டுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி காலி - மஹமோதர வைத்தியசாலையில் 15 வயது பாடசாலை மாணவி குழந்தையொன்றை பெற்றெடுத்தார்.

வயிற்று வலியால் துடித்த மாணவியைப் பெற்றோர் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற போது, மாணவி கர்ப்பம் தரித்திருந்தமை தெரியவந்தது.

காலி - வஞ்சாவல பிரதேச 19 வயது இளைஞர் ஒருவருடன் குறித்த பாடசாலை மாணவி வைத்திருந்த காதல் தொடர்பால் அவர் கர்ப்பம் தரித்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்ததை அடுத்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கை வெளியேற வேண்டும்!

## மஹிந்த அரசிடம் ஜே.வி.பி. வலியுறுத்து

பொதுநலவாயத்தின் நோக்கம் தொடர்ந்தும் காலனித்துவத்தைப் பேணுவதாக இருப்பதனால் இலங்கை பொதுநலவாயத்திலிருந்து உடனடியாக விலக வேண்டுமென மஹிந்த அரசிடம் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இலங்கை இறைமையுள்ள நாடு. இந்த அமைப்பில் இருப்பது, இந்தக் கூட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் அதன் தலைமைத்துவத்தை பெரிதாகப் பேசுவதும் இலங்கை இன்னும் காலனியாக இருப்பதைக் காட்டுகின்றது எனவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறினார்.

ராணியே எப்போதும் பொதுநலவாயத்தின் தலைவராக இருப்பார். மாநாட்டின் தலைமைத்துவம் முக்கியமானதல்ல. சகல அதிகாரங்களும் ராணியிடமே உள்ளன எனவும் அவர் கூறினார்.

பொதுநலவாயத்தின் தலைமைத்துவத்துக்கு உண்மையான அர்த்தமுள்ள தலைமை உண்டாக ராணி அதன் தலைமைத்துவத்திலிருந்து விலக வேண்டும். அப்போதுதான் குறைந்தபட்சம் நாடுகள் மீண்டும் காலனித்துவத்தின் கீழ் செல்லமாட்டாது எனவும் அவர் கூறினார்.

# தொலைபேசியில் பாலியல் தொந்தரவு கொடுத்தவருக்கு சிறைத் தண்டனை

## விமானப்படையைச் சேர்ந்தவராம்

திருமணமாகிய பெண்ணொருவருக்கு தொலைபேசி அழைப்புகள் மூலம் பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றத்தை ஒப்புக்கொண்ட விமானப் படையைச் சேர்ந்த ஒருவருக்கு கொழும்பு நீதிமன்ற மென்றில் ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு மேலாக இவருக்கு 3000 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் வாழும் பெண்ணொருவர், தான் அறிந்திராத ஒருவர் பாலியல் ரீதியில் மிகவும் மோசமான மொழியில் தொலைபேசியில் தன்னோடு பல தடவை பேசியதாக பொலிஸில் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸார் இந்த அழைப்புகளை மேற்கொண்டவரைக் கைது செய்தனர்.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து இவருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறை மற்றும் 3000 ரூபா தண்டம் ஆகிய தண்டனைகளை நீதிவான் வழங்கினார்.

# பிரபாகரனின் உதவியாளருக்கு இரண்டு வருட காலச் சிறை

## கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்தது

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தனிப்பட்ட உதவியாளராகப் பணிபுரிந்தவர் எனக் கூறப்படும் ஒருவருக்கு இரண்டு வருட கால சிறைத்தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

தனபாலசிங்கம் லிங்கதாசன் என்பவருக்கே கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் குமுதினி விக்ரமசிங்க இரண்டு வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்து, துப்பாக்கி சுடும் பயிற்சி மற்றும் இராணுவ தந்திரோபாயங்கள் பற்றிய பயிற்சிகளைப் பெற்றவர் என நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்ட அவருக்கு நீதிவான் மேற்படி தண்டனையை வழங்கினார்.

# குடும்பஸ்தர் குத்திக் கொலை

கொஸ்கொட, பியகம பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் குத்தி குடும்பஸ்தர் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

32 வயதான ஒருவரே இந்தச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

# முகம் முழுவதையும் மூடும் தலைக்கவசங்களுக்குத் தடை

முகம் முழுவதையும் மறைக்கும் வகையில் மூடும் தலைக் கவசங்களை பயன்படுத்துவதைத் தடை செய்யும் சட்டங்களை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப் போவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கண் இமைகள் தொடக்கம் நாடிவரையுள்ள பகுதிகளை மறைக்கும் தலைக்கவசங்களுக்கு சட்டப்படி தடை உள்ளது.

முழு முகத்தையும் மூடும் தலைக் கவசங்களைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பி வருவதால் இந்த சட்டம் அமுலாக்கப்படவுள்ளது என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்தார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எகிப்தில் இராணுவ ஆட்சிக்கு உருக் கூட்டும் மேற்கு நாடுகள்

எகிப்தின் வரலாற்றிலேயே முதல் தடவையாக நடந்த நீதியும் நேர்மையுமான தேர்தலின் மூலமாகத் தெரிவானவர் மொஹம்மட் மோர்சி. அவர் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக் காரர்களைக் கொல்லும்படி தூண்டினார் என்று அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சமீபத்தில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இரண்டு வருடங்களில் எகிப்தில் நடைபெற்ற இரண்டாவது புரட்சியில் மோர்சியின் அரசு மட்டும் கவிழ்க்கப்படவில்லை. ஜனநாயகத்துக்கு எகிப்து மீளச் செல்லவேண்டும் எனக் கோரும் பொதுமக்களும் கொல்லப்படுகிறார்கள்.

அல்-சிசி தலைமையிலான இராணுவ ஆட்சியாளர்களுக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் தற் பொழுது தமது ஆதரவைப் பகிரங்கமாகத் தெரிவித்திருப்பதும், ஒகஸ்ட் படுகொலைகளை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட எகிப்துக்கான ஆயுத ஏற்றுமதிக்கு பிரிட்டன் ஒப்புதல் வழங்கியிருப்பதும் பலதரப்புகளாலும் கண்டிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் அதிக சனத்தொகையைக் கொண்ட எகிப்து, மீண்டும் ஹொஸ்னி முபாரக் ஆட்சிக் காலத்தைப் போன்ற பாசிஸ சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்வதை கோடி காட்டுகின்றன. எகிப்தின் இராணுவ ஆட்சியாளர்கள் மோர்சியை விடுதலை செய்து எகிப்து மக்களின் ஜனநாயக உரிமை களுக்கு மதிப்பளிக்கவேண்டும். வெளிநாடுகளின் தலையீடுகளிலிருந்து எகிப்து முற்றாக விடுவிக்கப்பட வேண்டும்.

அனைத்துலக சட்டங்கள், அவற்றின் ஒழுங்குகளுக்கு முரணாக பலஸ்தீன பூமியில் நிறுவப்பட்டுள்ள இஸ்ரேலிய அரசின் பாதுகாப்பை உறுதி செய்வதும், பிராந்திய சக்தியாக இஸ்ரேலின் வல்லமையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதுமே மோர்சியின் வெளியேற்றத்தின் பின்னணியில் புதைந்திருக்கும் தெளிவான நோக்கம்.

இஸ்ரேலுக்குப் பாரிய அச்சுறுத்தலை பிராந்தியத்தில் வழங்கிவந்த ஒரே நாடு எகிப்துதான். 1979 கால்டேவிட் ஒப்பந்தம் மூலம் எகிப்து முதல் தடவையாக மேற்கு நாடுகளின் சதிக்குள் வீழ்ந்தது. 34 வருடங்களின் பின்னர் அச்சதிவலையிலிருந்து விடுபட்டவேளை, மோர்ஸியின் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் மீண்டும் அதனைச் சிக்கவைத்து விட்டன மேற்கு நாடுகள்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரி, சமீபத்தில் எகிப்துக்கு விஜயம் செய்தபோது எகிப்தின் இடைக்கால அரசுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயார் என்று அறிவித்துள்ளார். மோர்சி மீதான வழக்குக் குறித்து அவர் வாய்திறக்கவில்லை. மோர்ஸியை விடுதலைசெய்து எகிப்தில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துமாறு கோரிய அமெரிக்கா, தற்பொழுது அது குறித்து மௌனம் சாதிக்கிறது.

அரபு வசந்தம் மூலம் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற லிபியாவில், அமெரிக்கத் தூதுவர் கொல்லப்பட்டார். சட்டம், ஒழுங்கு மோசமடைந்துள்ளன. இஸ்லாமிய தீவிரவாதம் ஆதிக்கம் செலுத்துகிறது. பதவியிலுள்ள ஆட்சியாளர்களுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவருகின்றனர். சிரியாவில் அஸாத்தின் ஆட்சி கவிழுமானால், இஸ்லாமிய தீவிரவாதிகளின் பிடிக்குள் சிரியா சிக்கிவிடும். எகிப்திலும் ஹொஸ்னி முபாரக்கின் பதவி கவிழ்ப்புக்குப் பின்பு அங்கு முன்னர் தடைசெய்யப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் எழுச்சியடைந் துள்ளது. முபாரக்காலும், கடாபியாலும், அஸாத்தாலும் அடக்கப்பட்டிருந்த இஸ்லாமிய தீவிரவாதம், அரபு வசந்தம் காரணமாக எழுச்சி கண் டமை மேற்கு நாடுகளுக்குப் பெரும் தோல்வியாகும்.

ஜனநாயகம், மக்களின் சுதந்திரம் குறித்து அதிகம் பேசும் மேற்கு நாடுகள், எகிப்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மோர்சியைப் பாதுகாக்கத் தவறியமை ஜனநாயத்தை கேலிக்கூத்தாக்கி உள்ளது.

எகிப்திலும் லிபியாவிலும் சிரியாவிலும் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் இஸ்ரேலுடன் முரண்படாத, தமது எண்ணெய் வளங்களுக்குப் பாதுகாப்பான அரசுகளை அமைக்கமுடியும் என்று மேற்கு நாடுகள் மனப்பால் குடித்தன. ஆனால், இந்த நாடுகளில் அரபு தேசியவாதம் எழுச்சி பெறுவ தற்கும் அரசியல் ஸ்திரமின்மைக்கும் அரபு வசந்தம் வழிவகுத்தது.

சிரியாவில் அஸாத் ஆட்சிக் கவிழ்ப் பில் மேற்கு நாடுகளின் அக்கறை குறைந்து வருவதற்கு இதுவே காரணம். அஸாத் பதவி கவிழ்க்கப்பட்டால் இஸ்ரேலின் எல்லையில் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு கூடுதல் அச்சுறுத்தல் கொடுக்கும் ஓர் அரசு உருவாகலாம் என்ற அச்சமும் அவற்றுக்கு உண்டென்பதும் வெளிப்படுகிறது.

# அவலங்களே வாழ்வான தொண்டர் ஆசிரியர்கள்

ராஜராஜன்

தொண்டர் ஆசிரியர்களாகப் பல வருடங்கள் கடமையாற்றி கடந்த ஜூன் மாதம் ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களின் அவலநிலை தொடர்வதாகவே தோன்றுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய கல்வி வலயங்களிலும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலும் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு கடந்த ஜூன் மாதம் ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

### தேர்தலை முன்னிட்டு அதிகரித்த 4000 ரூபா

இவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் இவர்களது மாதாந்த வேதனமாக படிகள் உட்பட 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தொடர்ந்து மூன்று மாதங்களாக நியமனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு மாறாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இதனால் வியப்பும், மகிழ்ச்சியும் அடைந்த புதிய ஆசிரிய உதவியாளர் நியமனத்தைப் பெற்ற தொண்டராசிரியர்கள் தமது வாழ்வாதாரம் ஓரளவு சீராகும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். ஆனால் கடந்த மாதம் தமது வேதனத்தைப் பெற்றபோது நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டவாறு 6 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளதைக் கண்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் இவர்கள் வினா எழுப்பியபோது 'அது மேலிடத்து உத்தரவு' என்ற சுருக்க மான பதிலே இவர்களுக்குக் கிடைத் தது. வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டே தமக்கு 4 ஆயிரம் ரூபா அதிகரித்து வழங்கப்பட்டுள்ளமை அப்போதுதான் இவர்களுக்குத் தெரிய வந்தது.

### தொடர்ந்து ஏமாற்றப்படும் தொண்டர் ஆசிரியர்கள்

இந்த ஆண்டு வடபகுதியைச் சேர்ந்த 514 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் 10 வருடங்களுக்கும் மேலாக வேதனம் எதுவும் பெறாமல் கடமையாற்றியுள்ளனர். இவர்கள் அனைவருமே வறிய குடும்பங்களைச் சேர்ந்த வர்களாக உள்ளதோடு, போரினால் பல்வேறுபாதிப்புக்களையும்எதிர்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

2009 ஆம் ஆண்டில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வசிப்பதாகக் கூறி இவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். ஆனால் என்றோ ஒருநாள் தமக்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இவர்கள் காத்திருந்தனர்.

### எந்தப் போராட்டங்களும் பயன்தரவில்லை

இருந்த போதிலும் தமக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மறியல் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் என்பவற்றிலும் ஈடுபட்டனர். அதன்போது இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஆவன செய்வதாக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயரதிகாரிகள் எனப் பலரும் உறுதிமொழிகளை வழங்கினர். இவற்றை நம்பிய இவர்கள் தமது போராட்டங்களைக் கைவிட்டனர். ஆனால் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகப் பின்னர் உணர்ந்து கொண்டனர்.

### அவசர அவசரமாக வழங்கப்பட்ட நியமனங்கள்

இந்த நிலையில் நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தல் இவர்களுக்குப் பேருதவி புரிந்தது. ஏனென்றால் தேர்தல் இடம்பெறுவதை முன்னிட்டு இவர்களுக்கு அவசரம் அவசரமாக ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன. தேர்தலில் ஆளும் கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென்ற நெருக்குதல் பல்வேறு தரப்புகளிலிருந்தும் இவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் நடந்தது வேறு விடயம் என்பது அனைவருக்கும் தெரியும்.

### எல்லாமே மேலிடத்து உத்தரவு

ஆனாலும் தமது வாழ்வில் ஒளி ஏற்றிய வடமாகாண சபைத் தேர்தலுக்கு நன்றி தெரிவித்த இவர்கள் தேர்தலின் போது தமது கடமையை சீராகச் செய்து முடித்தனர். ஆனால் நியமனம் வழங்கப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர் தமக்கு அதிர்ச்சியொன்று ஏற்படுத்தப்படும் என்று இவர்களுக்கு அப்போது புரியவில்லை. தமது வேதனத்தைப் பெறும்போதுதான் அது புரிந்தது. சம்பளம் வழங்கப்பட்ட உறை கனதியற்றுக் காணப்பட்டது. அதிர்ச்சியுடன் பணத்தை எண்ணிப் பார்த்தவர்கள் அதற்கு முந்திய மாதம் தாம் பெற்ற 10 ஆயிரத்துக்குப் பதிலாக 6 ஆயிரம் ரூபா மட்டுமே இருப்பதைக் கண்டு தேளால்கொட்டப்பட்டவர்களைப்போன்று வேதனையில் துடித்தனர். உடனடியாக இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தபோது எல்லாமே மேலிடத்து உத்தரவு என்ற பதில்தான் கிடைத்தது. இதற்குப் பிறகு இவர்களால் என்ன செய்ய முடியும்?

### அதிகரித்த விலைவாசிக்கு போதுமா இந்தச் சம்பளம்?

இவர்களில் பலர் திருமணமாகி குழந்தைகளை உடையவர்கள். இந்த நிலையில் இவர்களுக்கு வழங்கப்படும் 6 ஆயி ரம் ரூபா தற்போதைய விலைவாசி உயர்வை எந்த விதத்திலும் சமாளிப்பதற்குப் போதாத நிலையிலேயே உள்ளது. மேலும் இவர்களுக்கு அரச நியமனம் கிடைத்துள்ளதாகக் கூறி ஏற்கெனவே வழங்கப்பட்ட அரச உதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இவர்களின் நிலை படுமோசமாக மாறியுள்ளது.

மேலும் பலருக்கு தொலைவிலுள்ள பாடசாலைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்துச் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் இவர்கள் திணறி வருகின்றனர்.

### எப்போது விடிவு கிடைக்கும்?

எனவே தம்மை ஆசிரியர் சேவைக்கு முழுமையாக உள்வாங்குவதன் மூலமாகவே தமது துன்பங்களுக்கு விடிவு கிடைக்குமென இவர்கள் நம்புகின்றனர்.


பல வருடங்களாக நொந்து நொடிந்த நிலையில் துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்களுக்கு நல்லதொரு எதிர்காலம் அமைத்துக் கொடுக்க உரியவர்கள் முன்வர வேண்டும். இதனால் இவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலையில் ஓரளவு மாற்றம் ஏற்படும்.

இதேவேளை போதிய காரணமின்றி தகுதியிருந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படாதிருக்கும் ஏனைய தொண்டராசிரியர்களின் விடயத்திலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அவர்களுக்கும் ஏனையவர்களைப் போன்று நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.



நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தல் இவர்களுக்குப் பேருதவி புரிந்தது. ஏனென்றால் தேர்தல் இடம்பெறுவதை முன்னிட்டு இவர்களுக்கு அவசரம் அவசரமாக ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

# தமிழ்மக்கள் விடயத்தில் ஐ.நா. தவறிழைத்தது





இலங்கையில் இடம்பெற்ற போரின்போது, மக்களைப் பாதுகாத்தல் என்கின்ற தனது நோக்கத்தை ஐ.நா நிறைவேற்றத் தவறியுள்ளது. தமிழ் மக்கள் கொலை வலயத்திற்குள் அகப்பட்டு உயிருக்குப் போராடிய போது இவர்களைக் காப்பாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இலங்கையில் கொலை வலயத்தில் உண்மையில் என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை ஐக்கிய நாடுகள் சபை நன்றாக அறிந்து வைத்திருந்தது.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் போரில் அகப் பட்ட மக்களைப் பாதுகாக்க முற்பட வில்லை என மனித உரிமை அமைப்புக்கள் பல குற்றஞ்சாட்டின. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை ஐ.நா ஓர் ஆண்டுக்கு முன்னர் தான் ஏற்றுக்கொண்டது. இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை வாய் மூடி, காதைப் பொத்தி, கண் தெரியாததுபோல் நடந்துள்ளது.

அதாவது இலங்கையில் படுகொலைகள் இடம்பெற்ற போது ஐ.நா தட்டிக் கேட்க முற்படவில்லை.

### தமிழ் மக்கள் விடயத்தில் மௌனம் காத்த ஐ.நா.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழிருந்த மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதாகக் கூறியதன்மூலம், இலங்கை அரசானது தன்மீதான போர்க் குற்றச்சாட்டுக்களை திசை திருப்ப நினைத்தது.

இலங்கையில் போர் மீறல்கள் இடம்பெற்ற போது அவை தொடர்பில் ஐ.நா போதியளவில் நடவடிக்கை எடுக்கத் தவறியது. இது போன்று மீண்டும் ஒரு தவறு இடம்பெற்று விடக்கூடாது. இது போன்ற சூழலில் ஐக்கிய நாடுகள் சபை மக்களைப் பாதுகாப்பதற்கும், மனிதாபிமான ரீதியில் பொறுப்புக்களை ஏற்பதற்கும் தனது உச்ச நியமங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீ மூனால் நியமிக்கப்பட்ட, உள்ளக ஆராய்ச்சி வல்லுநர் குழுவின் தலைவரான சாள்ஸ் பெற்றியால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுமக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் போலல்லாது ஐக்கிய நாடுகள் சபை வன்னிப் பிராந்தியத்தில் அகப்பட்டுத் தவித்த மக்களைப் பாதுகாப்பதைக் கைவிட்டது.

### இழப்புக்களை வெளியிடுவதில் கூட பின்னின்றது

இலங்கையில் இறுதிக் கட்டப் போர் தீவிரமடைந்திருந்த வேளையில், ஐக்கிய நாடுகள் சபை போரில் படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளியிடுவதைத் தவிர்த்தது. இதன் பின்னர், போரில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்ட போது, இலங்கை இராணுவத்தினரால் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் வைத்தியசாலைகள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை பொதுமக்கள் இழப்பிற்கு மிக முக்கிய காரணம் என்பதை ஐ.நா அறிவிக்கவில்லை. மாறாக பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான முழுப் பழியையும் விடுதலைப் புலிகள் மீது சுமத்தியது.

இறுதி ஐந்து மாதங்கள் மட்டும் இடம் பெற்ற போரில் குறைந்தது 70,000 வரையானோர் படுகொலை செய்யப் பட்டுள்ளனர் என ஐ.நா அறிவித்துள்ளது. இதைவிட 146,000 வரை யானோர் காணாமற்போயுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### இலங்கை அரசைக் காப்பாற்றும் முயற்சி

தமிழ் மக்களுக்கு இழைத்த போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா அமைதி காத்ததன் மூலம் அனைத்துலக விமர்சனங்களிலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்ற முற்பட்டது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசு அழித்தமை தொடர்பில் அதனைப் பாராட்டியதுடன், தொடர்ந்தும் அனைத்துலக சாசனங்களால் இலங்கை அரசு கட்டுப்படுத்தப்படுவதை ஐ.நா தடுத்துள்ளது.

இலங்கை அரசினால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையைச் சிலர் பயங்கரவாதத்தின் மீதான போர் எனப் பெயரிட்டனர். இலங்கை மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நம்பகமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்தன.

போர் முடிவடைந்து ஓர் ஆண்டின் பின்னர், அதாவது 2010இல், இலங்கை தன் மீது இழைக்கப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்புக் கூறாது காலத்தை இழுத்தடிப்பதற்கு ஐ.நாவின் அமைதிப் போக்கே காரணமாக உள்ளது என கனடா உயர் நீதிமன்றின் முன்னாள் நீதிபதியும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் உயர் ஆணையாளரும், அனைத் துலக குற்றவியல் நீதிமன்றின் யூகோசிலோவியா மற்றும் றுவாண்டாவிற்கான முன்னாள் பிரதம வழக்கறிஞரும், அனைத்துலக நெருக்கடிக் குழுவின் தற்போதைய தலைவருமான லூயிஸ் ஆர்பர் குறிப்பிட்டிருந்தார்.

### பாதுகாப்பு வலயத்திலும் தாக்குதல் இடம்பெற்றது

இலங்கையில் இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற போது ஐ.நா தனது பணியை ஆற்றத் தவறியமை தொடர்பில் இதன் உள்ளக அறிக்கையில் சில காரணங்கள் நியாயப்படுத்தப்பட்டுள்ளன. தனது படைகளால் இழைக்கப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் வெளியுலகுக்கு தெரியக் கூடாது என்பதற்காக இலங்கை அரசு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கான அனுமதியை மறுத்தது. அத்துடன் இலங்கையில் பணிபுரிந்த ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த பணியாளர்கள் அரசால் அச்சுறுத்தப்பட்டனர். ஐ.நா பணியாளர்களுக்கு எதிராக இலங்கை அரச ஆதரவு ஊடகங்கள் பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தன. இதற்கும் மேலாக ஐக்கிய நாடுகள் சபையின் கணினி முறைமைகள், மின்னஞ்சல்கள், தொலைபேசிகள் போன்றன கண்காணிக்கப்பட்டன.

இவ்வாறான காரணங்களால் வன்னியில் செயற்பட்ட தனது பணியாளர்களை வெளியேற்றுவதென 2008இல் ஐ.நா தீர்மானித்தது. ஐ.நா வின் கீழ் பணிபுரிந்த உள்ளூர் பணியாளர்கள் வெளியேறுவதற்கு புலிகள் அனுமதி வழங்காததால் அவர்களை மட்டும் ஐ.நா வெளியேற்றவில்லை.

ஜனவரி 2009இல் ஐ.நா உணவுத் தொடரணி மீது இலங்கை இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதானது பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திய முதலாவது சம்பவமாக அமைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரியில் ஐ.நா அமைப்பின் வன்னிக்கான பிரதிநிதிகள் இரு வாரங்களுக்குள் 3,700 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டும், காயமடைந்தும் உள்ளதாக இலங்கை அரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினர். அதில் இந்த மக்களைப் பாதுகாக்குமாறும் கோரப்பட்டது. போரில் பங்கு கொண்ட இரு தரப்புக்களும் மக்களின் இழப்புகளுக்குக் காரணமாக இருந்த போதும், இலங்கை அரச படைகளே அதிகம் தாக்குதல்களை மேற்கொண்டன.

### புலிகள் மீது இழப்புக்களின் பழி

ஐ.நா தகவல்களின்படி, ஐ.நா நிறுவனங்களின் நிலையங்கள், வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக அரச படைகளின் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல்களிலேயே அதிக இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இலங்கை அரசுக்கு ஐ.நா நிறுவனத்தின் வன்னிக்கான பிரதிநிதிகள் அனுப்பிய கடிதத்தில், அனைத்துலக மனிதாபிமான மற்றும் அனைத்துலக மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டு பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர் என்பது குறிப்பிடப்படவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதத்தின் ஆரம்பத்தில், ஐ.நா அரசியல் விவகாரப் பணியாளர்கள் இலங்கைக்கு வந்திருந்தனர். போரில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கை தொடர்பாக இவர்கள் ஆராய்ந்ததுடன், இது தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுக்காவிடில் பொதுமக்களின் இழப்புகளுக்கு நாங்கள் காரணமாக இருப்போம் என குறிப்பிட்டிருந்தனர். ஆனால் இலங்கை அரசு, பொதுமக்களின் இழப்பை மறுத்தது. இதேவேளையில், கொழும் பில் செயற்பட்ட சில ஐ.நா பணியாளர்கள், ஐ.நா இந்த இழப்புக்கள் தொடர்பான முற்று முழுதான பழியை புலிகள் அமைப்பு மீது போட்டமை தொடர்பில் அதிருப்தியடைந்தனர்.

### பொதுமக்கள் மீது தாக்கியது இலங்கையின் முப்படைகளே

2009 பெப்ரவரி 06 தொடக்கம் பாதுகாப்பு வலயத்திற்குள் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் மீது இலங்கை இராணுவம் தொடர்ச்சியாக எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டது. அதாவது தரை, கடல் மற்றும் வான் போன்ற சகல மார்க்கங்களில் இருந்தும் இலங்கை இராணுவம் பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. மிகச்சிறிய பாதுகாப்பு வலயத்திற்குள் 300,000 தொடக்கம் 350,000 வரையான பொதுமக்கள் தஞ்சம் புகுந்திருந்தனர். இலங்கைப் படையினர் பொதுமக்கள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களையும், நீண்ட தூர எறிகணை மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். அத்துடன் சிறிய ரக உந்து கணைகள், துப்பாக்கிச் சூடு போன்றவற்றையும் பயன்படுத்தினர் என ஐ.நா உள்ளக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே 18, 2009 அன்று சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர். இவர்கள் போர் நடவடிக்கையின் போதே படுகொலை செய்யப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. மே 18 காலை வேளையில், வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு இலங்கை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த நிராயுதபாணிகளான புலி உறுப்பினர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர் என ஐ.நா. உள்ளக ஆய்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இலங்கை அரசை ஐ.நா.கண்டிக்கவில்லை

போர் முடிவடைந்து, இலங்கை அரசு போர் வெற்றியை அறிவித்து ஒரு வாரத்தின் பின்னர், ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கையில் என்ன நடந்தது என்பதை அறிந்து வைத்திருந்த போதும், தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசு அழித்ததைப் பாராட்டி தீர்மானம் ஒன்றை முன்வைத்தது. ஆனால் இலங்கை இராணுவத்தால் போரின் போது இழைக்கப்பட்ட தவறுகளை மனித உரிமைகள் பேரவை குறிப்பிடத் தவறியது. வைத்தியசாலைகள் மீதான குண்டுத் தாக்குதல்கள், உணவு மற்றும் மருந்துகளுக்கு தடை விதித்தமை, இராணுவத் தின் முற்று முழுதான கண்காணிப்பின் கீழ் 280,000 வரையான தமிழ் மக்கள் முகாங்களில் அடைக்கப்பட்டமை போன்ற இலங்கை அரசால் இழைக்கப்பட்ட மீறல்களில் எந்த வொரு மீறலையும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை தனது தீர்மானத்தில் குறிப்பிடத் தவறியது.

*நன்றி: புதினப்பலகை*

வவுனியா நவீன சந்தையின்

# மோசமான நிலையிலுள்ள நுழைவாயிலால் சிரமம்




வவுனியா, நவ.9

வவுனியா நகர நவீன சந்தைக்குள் பிரவேசிக்கும் நுழைவாயில்மிகவும்மோசமான நிலையில் காணப்படுவதால் அங்கு வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகள், பொருள்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் உட்படப் பலரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா நவீன சந்தையில், மரக்கறி, மீன்வகைகள், உணவுப் பொருள்கள், பழ வகைகள் உட்பட பல்வேறு பொருள்களை பெற்றுக் கொள்வதற்காக நெளுக்குளம், கோவில்குளம், சமணங்குளம், கோமரசங்குளம், வெளிக்குளம்,கூமாங்குளம், கந்தபுரம், பூந்தோட்டம், மணிபுரம், கணேசபுரம் உட்பட பல்வேறு கிராமங்களில் இருந்தும் பெருமளவான நுகர்வோர் வருகை தருகின்றனர். இதே வேளை வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மொத்த வியாபாரிகளும் உள்ளூர் விற் பனையாளர்களும் இங்கு வருகை தருகின்றனர். சந்தையின் முன்நுழை வாயில் பகுதி குன்றும்குழியுமாகக்காணப்படுவதால் மழை வெள்ளம் தேங்கி நிற்கின் றது.

இதனால் வாகனங்கள் தரித்து நிற்பதிலும், நடமாடுவதிலும் நுழைவாயில் ஊடாக உட் செல்வதிலும் நுகர்வோர் சிரமங்களை எதிர்கொள்வதைக்காணமுடிகின்றது. (க-402)

# புகைத்தல் எதிர்ப்பு 'ஸ்ரிக்கர்' ஒட்டும் பணி

தென்மராட்சி, நவ.9


தென்மராட்சி பிரதேசத்தில் பொது இடங்களில் புகைத்தலைத் தடுக்கும் விதத்தில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் புகைத்தல் எதிர்ப்பு தொடர்பான 'ஸ்ரிக்கர்களை' வர்த்தக நிலையங்களில் ஒட்டி வருகின்றனர்.

கொடிகாமம், எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்களில் புகைத்தல் எதிர்ப்பு 'ஸ்ரிக்கர்கள்' ஒட்டப்பட்டு வருகின்றன. (வ-9)



# பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெற்ற கௌரவிப்பு



யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பும், சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி தலைமையில் நடைபெற்றது.

கடும் மழைக்கு மத்தியிலும் கோலா கலமாக நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராஜா, வித்தியாலய அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.சுரேந்திரநாதன், வைத்திய கலாநிதி ம.சுரேந்திரன், அதிபர் அருட்சகோதரி ஜீவந்தி மற்றும் விருந்தினர்கள் 'பாண்ட்' வாத்திய சகிதம் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

மாகாண கல்வியமைச்சர் மங்கலவிளக்கேற்றிநிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தலைமையுரை, விருந்தினர்உரைகளைத்தொடர்ந்து சாதனை மாணவர்களுக்கான பதக்கங்களையும் சான்றிதழ்களையும் முதன்மை மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் ஆகியவற்றையும் மாகாணக் கல்வி அமைச்சர் வழங்கினார்.

அவரைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி ம.சுரேந்திரன், கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார், வித்தியாலய அதிபர் ஆகியோரும் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட பொதுமக்கள் கலந்துகொண்டனர். (வ-7-9)

# வவுனியாவில் நாளை சிறப்பாக நடைபெறவுள்ள பாரதி விழா

பாரதி விழாவை வவுனியாவில் நாளை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வவுனியா முன் பள்ளியின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் இந்தப் பாரதி விழா நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் முன்பள் ளியின் அதிபர் ஜெயராஜா சந்திரா தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச் சர் ப.சத்தியலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல் கலைக்கழக வவுனியா வளாக பீடாதிபதி சி.குகநேசன், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா, விரிவுரை யாளர் தி.ஜெயகாண்டீபன், வவுனியா மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.பத்மரஞ்சன், நகரசபைச் செயலாளர் க.சத்தியசீலன், வவுனியா முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தர்மபாலன், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர் வே.இந்திரன், தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலய அதிபர் திருமதி எம்.திருவருள்நேசன், ஆசிரிய ஆலோசகர் செ.விஜயகாந்தன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர் சி.சிவானந்தன், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜோசெப் ஜெயகெனடி, முன்பள்ளிகளின் மாவட்ட இணைப்பாளர் ச.அருள்வேல் நாயகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-421)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்**: புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிடைக்கும்.

**இடபம்**: சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். யாரையும் முழுமையாக நம்ப வேண் டாம். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**மிதுனம்**: எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்துபணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கடகம்** : புதிய முயற்சிகள் வெற்றியடையும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**சிங்கம்**: வேலையாள்களின் ஒத்து ழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரி வடையும்.

**கன்னி**: குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

நாளை

ஐப்பசி-24 ஞாயிற்றுக்கிழமை 10.11.2013
திதி: அட்டமி பி.இ.02.21 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப.02.31 வரை
சுபநேரம்: 09.05 - 10.35 வரை
இராகுகாலம்: 04.35 - 06.05 வரை

**துலாம்**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**விருச்சிகம்**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**தனுசு**: நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். முன்கோபத்தால் பகை உண்டாகும். அவசரம் வேண்டாம்.

**மகரம்**: வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் மிகுதிகளைப் போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கும்பம்**: மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். முன் கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும்.

**மீனம்**: வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்துப் போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 2 | | 3 | | 8 | 6 |
| 8 | | 2 | | | | | | 4 |
| | 6 | | 4 | | 7 | | | |
| | 5 | | | | 2 | | | 8 |
| | | 9 | 5 | | 6 | 2 | | |
| 3 | | | 8 | | | | 6 | |
| | | 8 | 3 | | 4 | | 1 | |
| 7 | | | | | | 3 | | 9 |
| 2 | 3 | | 6 | | 9 | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 5 | 2 | 1 | 3 | 9 | 8 | 6 |
| 8 | 1 | 2 | 9 | 6 | 5 | 7 | 3 | 4 |
| 9 | 6 | 3 | 4 | 8 | 7 | 5 | 2 | 1 |
| 6 | 5 | 4 | 7 | 3 | 2 | 1 | 9 | 8 |
| 1 | 8 | 9 | 5 | 4 | 6 | 2 | 7 | 3 |
| 3 | 2 | 7 | 8 | 9 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 9 | 8 | 3 | 7 | 4 | 6 | 1 | 2 |
| 7 | 4 | 6 | 1 | 2 | 8 | 3 | 5 | 9 |
| 2 | 3 | 1 | 6 | 5 | 9 | 8 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

வெள்ள நீர் கடைகளுக்குள் புகுந்ததால்

# பாதையை மூடிய வர்த்தகர்கள்; பொலிஸாரின் சமரசத்தின் பின் திறப்பு

வலி.வடக்கு, நவ.9

பண்டத்தரிப்பிலிருந்து பிரான்பற்றுக்குச் செல்லும் வீதிச் சந்தியில் மழைநீர் வழிந்தோடாது தேங்கி நிற்பதால் அந்தப் போக்குவரத்துப் பாதையை அருகிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் பழைய வெற்று பரல்களை வைத்து தடை செய்த சம்பவம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

குறிப்பிட்ட பண்டத்தரிப்பு பிரான்பற்று வீதி காப்பெற் போடப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளம் வடிந்து செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் சந்தியில் தேங்கும் வெள்ளத்தினூடாக வாகனங்கள் செல்லும் வேளையில் அருகில் உள்ளகடைகளுக்குள்வெள்ள நீரை தெறிக்கும் நிலைமை காணப்படுகின்றது. இதனால் வர்த்தகர்கள் குறிப் பிட்ட வீதிப் போக்குவரத்தைத் தடை செய்யும் வகையில் பாதையில் நேற்று தடை ஏற்படுத்தினர்.

அவர்களது நடவடிக்கையால் வீதியில் போக்குவரத்து செய்வதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் வர்த்தகர்களுடன் கலந்துரையாடினர். இதன் பின் குறிப்பிட்ட போக்குவரத்து தடையை நீக்கியதுடன் போக்குவரத்தையும் சீர்செய்தனர் பொலிஸார்.

இதேவேளை குறிப்பிட்ட நீர்தேங்கும் விடயமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன்தொடர்பு கொண்ட போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலத்தில் பெய்யும் மழைவெள்ளம் உரிய முறையில் வழிந்து செல்லக் கூடிய வகையில் வெள்ள வாய்க்கால் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என பண்டத்தரிப்பு வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ந-86)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

கரணவாய் தாமோதரா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் சி.குருகுலலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்வார். (ந-35)

★★★

வடமராட்சி, நவ.9

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே.இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்வார். பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ந-8)



நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது பதவி யேற்பு நிகழ்வை வட்டத் தலைவர் லயன் ரி.யோகேந் திரன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். பிரதம விருந்தினரான லயன்ஸ் கழக முதலாவது உதவி ஆளுநர் லயன் இக்னேசியஸ் கமிலஸ் அருகில் காணப்படுகிறார். (வ-8)

## கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

வலி.கிழக்கு பிரதேசத்தில் மக்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப தலைவர் கே.தர்மலிங்கம் கேட்டுள்ளார்.

தற்போது பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கால்நடைகள் வயல் நிலங்களுக்குள் சென்று நெற்பயிர்களை நாசம் செய்வதாக பல முறைப்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

அதனை அடுத்து மேய்ச்சலுக்கு என ஒதுக்கப்பட்ட தரவைகளில் மட்டும் கால்நடைகளை கட்ட வேண்டும்.

கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகள் பிரதேச சபையின் சட்டத்துக்கு அமைய பிடித்துக் கட்டி வைக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ந-17)

# தமிழ்த் தொண்டாற்றிப் புகழ்பெற்ற வித்துவ சிரோமணி இ.கணேசையர்

தமிழறிஞர், வித்துவசிரோமணி சி.கணேசையரின் 55 ஆவது அமரத்துவ தின விழா அவரது பிறந்த ஊரான புன்னாலைக்கட்டுவனில் இன்று கொண்டாடப்படுகிறது.



ஈழத்துத் தமிழ் அறிஞர் வரிசையில் வித்துவசிரோமணி சி.கணேசையர் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவர். இவர், ஆறுமுகநாவலரது மருமகனும் மாணாக்கருமான வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையிடம் கல்வி கற்று, நாவலரது கல்விப் பரம்பரையில் வந்த சிறப்புக்கு உரியவர்.

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் ஒன்றான புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அந்தண குலத்தில் சின்னையருக்கும் சின்னம்மாளுக்கும் புதல்வராக 1878 ஆம் ஆண்டில் கணேசையர் பிறந்தார். சுன்னாகம்குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கர் என்ற பெருமை இவருக்குண்டு.

கணேசையரின் தமிழ்ப்பணிகள் பலதரப்பட்டவை. அவர் இலக்கண வித்தகராகவும் சிறந்த போதனாசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், உரைநடையாளராகவும், ஆய்வாளராகவும், பேரறிஞராகவும், கவிஞராகவும் விளங்கினார். சோதிட சாஸ்திரத்திலும் பயிற்சியுடையவராக இருந்தார்.

ஐயரவர்களின் தமிழ்ப்பணிகளிலே தலையாயது அவர் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கங்களாகும். இப்பணி கணேசையரை புகழின் உச்சநிலையில் வைத்தது. ஐயரவர்களின் தொல்காப்பிய விளக்கவுரை இன்று பல பதிப்புகளைக் கண்டுள்ளது. தமிழகத்தில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஐயரவர்களின் இந்த நூலைப் பதிப்பித்துள்ளது. தமிழகத்தின் பல பல்கலைக்கழகங்களில் ஐயரவர்களின் தொல்காப்பிய விளக்கவுரை உயர் கல்விக்குப் பாடநூலாக விளங் குகிறது.

ஐயரவர்கள் மொத்தமாகப் பதினெட்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழகத்தில் இருந்து வெளிவந்த செந்தமிழ் என்னும் சஞ்சிகையில் 1903 முதல் 1950 வரையான காலப் பகுதியில் அறுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதினார். சுன்னாகத்திலிருந்து வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையில் 1932 முதல் 1957 வரையான காலப் பகுதியில் 17 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

நீண்ட காலமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் அவ்வப்போது கணேசையருடன் தொடர்பு கொண்டும் தமது தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொண்ட தமிழறிஞர்கள் பலர்.

ஐயரது 60 ஆவது ஆண்டு நிறைவு மணிவிழாவின்போது ஈழத்தமிழ் அன்பர்கள், அறிஞர்கள் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஒன்று கூடி பெருவிழாக் கொண்டாடி அன்னாருக்குப் பொற்கிளி வழங்கிக் கௌரவித்தார்கள். 1952 இல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தினர் அன்னாருக்கு வித்துவ சிரோமணி என்னும் பட்டம் வழங்கிக் கெள்ரவித்தனர்.

ஐயரவர்கள் தமது குலதெய்வமான ஆயாக்கடவை ஐங்கரன் மீது ஊஞ்சல் பாடியுள்ளார்.

ஐயரவர்கள் தனது பிறந்த ஊராகிய புன்னாலைக்கட்டுவன் மீது பெரும் அபிமானம் கொண்டவர். 1932 ஆம் ஆண்டிலிருந்து தமது மனைவியின் ஊராகிய வறுத்தலைவிளானில் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் ஓர் ஆச்சிரமம் அமைத்து துறவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அங்கும் சனி, ஞாயிறு நாள்களில் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லி வந்தார்.

ஐயரவர்கள் தமது 81 ஆவது வயதில் 08.11.1958 ஆம் திகதியன்று சிவபத மடைந்தார்.

ஐயரவர்களின் உருவச் சிலை புன்னாலைக்கட்டுவனில் அன்னாரது குலதெய்வமாகிய ஆயாக்கடவை ஐங்கரன் முன்றலில் அமைக்கப்பட்டுள்ளது. ஐயரது பெயரைத்தாங்கிய கணேச சனசமூக நிலையம், கணேச முன்பள்ளி ஆகியனவும் புன்னாலைக்கட்டுவனில் இயங்கி வருகின்றன.

சிவஸ்ரீ தி.கெங்காதரக்குருக்கள்

# நீதித்துறையின் சுதந்திரத்துக்காக உழைத்தவர் அமரர் பஞ்சலிங்கம்

வடமராட்சி, நவ.9

மூத்த சட்டத்தரணி அமரர் பஞ்சலிங்கம் நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப் படக்கூடாது என்பதில் கடைசி வரை அளவற்ற அக்கறை உடையவராக இருந்தார் என பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

மூத்த சட்டத்தரணி சிவப்பிரகாசம் பஞ்சலிங்கத்தின் மறைவு குறித்த நினைவு கூரல்நிகழ்வு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற திறந்த நீதிமன்றத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு முதியவரும் ஒரு நூலகம் என்று தான் சொல்லப்படுகின்றது. அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற அறிவு, அனுபவம் இவையெல்லாம் ஒரு நூலகத்திலிருந்து பெறுவது போன்றது தான். அதனால் தான் ஒரு வயோதிபரின் சாவு ஒரு நூலகமாய் சங்கமிப்பதாகும். அந்த வகையில் அமரர் பஞ்சலிங்கம் ஒரு சட்ட நூலகமாகத் திகழ்ந்திருந்தார். அந்த சட்ட நூலகம் தீயுடன் சங்கமமாகி விட்டது. சட்டத் தரணிகள் மாத்திரமல்ல பொது மக்கள் மாத்திரமல்ல நீதிபதிகளுக்கும் கூட அவரிடமிருந்து ஆலோசனைபெறக்கூடிய ஒரு சட்ட ஆலோசகராக வாழ்ந்து வந்துள்ளார் - என்றார்.

யாழ்ப்பாணம்சட்டத்தரணிகள் சங்கத் தலைவி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் தனது அஞ்சலியுரையில்:-

அமரர் பஞ்சலிங்கம் நீதிமன்றத்தில் நடந்து கொள்கின்ற முறையைப் பார்த்தவர்கள் சட்டத் தொழில் குறித்து இலகுவாகப் புரிந்து கொண்டிருந்திருப்பர். எந்தச் சட்டத்தரணியாயினும் நீதிமன்றச் சட்டம் பற்றி விளக்கம் கேட்கும் போது தன்னால் இயன்ற அளவுக்கு மேற்கோள் களுடன் தனது விளக்கத்தை வழங்குவார்.

அமரர் பஞ்சலிங்கம் விளையாட்டுத் துறையிலும் முன்னோடியாக இருந்தவர். ஹாட்லிக் கல்லூரியில் விளையாட்டுத் துறையில் உயரம் பாய்தலில் சம்பியன் பட்டம் பெற்றிருந்தார். இந்தச் சாதனை 20.30 வருடங்கள் முறியடிக்கப்படாத சாதனையாக நிலை நாட்டப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து பல்கலைக் கழகத்தில் தொடர்ச்சியாக விளையாடி விருதுகளைப் பெற்றுக்கொண்டார். கொழும்பு பல்கலைக் கழகத்தின் சார்பில் இந்தியாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி பிறந்த மண்ணுக்கும், பல்கலைக் கழகத்துக்கும் புகழைத் தேடிக் கொடுத்தவர். அவரது மறைவு சட்டத் துறைக்கு பேரிழப் பாகும் -என்றார். (ந-8)

## ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பலாம்


யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தால் வருடாந்த அமர்வுக்கான ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. இந்த வருட அமர்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி "சூழலுக்கான அறிவும் தொழில் நுட்பமும்" என்ற கருப்பொருளில் நடை பெறவுள்ளது.

தூய, பிரயோக மருத்துவ சமூக விஞ்ஞான ஆய் வாளர்களிடம் இருந்து ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திக திக்கு முன்னர் பொதுச் செயலாளர் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (வ-14)

# மரண அறிவித்தல்

## முத்தையா மகேந்திரராஜா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மகேந்திரராஜா நேற்று (08.11.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தேவாலய வீதி.
(Church Lane)
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே. 021 222 2947

# கண்ணீர் அஞ்சலி



எமதுபாடசாலை
ஆசிரியை
திருமதி
மதிவதனி
சதீஸ்குமார்
அவர்களின்
மாமியார்
திருமதி
அன்னபூரணம்
முத்துராசா

அவர்கள் 02.11.2013 அன்று இறை பதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(39851)(3.6.4) ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/செங்குந்த இந்துக்கல்லூரி

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை செல்வராசா



மயிலிட்டி, வீரமாணிக்க தேவன்துறையைப் பிறப்பிடமாகவும், இந்தியா, திருச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை செல்வராசா (07.11.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை -அம்மையாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருமைத்துரை -செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், யோகராசா, தவராசா, தேவதாஸ், தர்மராசா, இன்பராசா, நவநீதம் (தங்கா), சுகுணா, றகுணா, மோகனா, வதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தசோதி, கேசவமூர்த்தி, சந்திரலிங்கம், விஜயறஞ்சன், பார்த்திபன், நாகேஸ்வரி, ஜெயராணி, சுமித்திரா, கீதா, செல்வி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.11.2013) திங்கட்கிழமை இந்தியா, திருச்சியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39828)
(12.6.3)

'அன்னை இல்லம்',
மாடசாமி கோயிலடி,
பண்டாரிகுளம், வவுனியா.

தகவல்:
கேசவமூர்த்தி சுகுணா
குடும்பத்தினர்.

# 25ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

மலர்வு 09.11.1988
உதிர்வு 24.01.2009



## ஸ்ரீரங்கநாதன் றஜீவிதா (திசானி)

நீண்ட நாள்கள் நீ வாழ்வாய் என்றிருந்தோம்
ஒரு நொடிப் பொழுதில் மறைந்து போனாயே!
ஆண்டுகள் நான்கென்ன ஆயிரம் தான் ஆனாலும்
எம் அருகில் தான் நீ இருக்கின்றாய்.
திசானி என்று நாம் கூப்பிடுவது
உனக்குக் கேட்கவில்லையா?

C.ஸ்ரீரங்கநாதன்.
(ஓய்வுபெற்ற காணி அலுவலர்)
96. குடிமத்தி. உருத்திரபுரம்.
கிளிநொச்சி.

என்றும் உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, அண்ணா, தங்கை.

# மரண அறிவித்தல்கள்



கலாபூசணம்
## V.J.கொன்ஸ்ரன்ரைன்
(குருநகர் துரை - அகில இலங்கை சமாதான நீதிவான்)

28/1, சென்ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் V.J.கொன்ஸ்ரன்ரைன் நேற்று (08.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - கிறிஸ்ரின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பென் ஏபிரகாம் மற்றும் மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மடுராஜேஸ்வரி குளோட்டில்டாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், கிறிஸ்ரியன் மகேந்திரன் (மகேன் - Hayleys Power Engineering), விஜயசந்திரன் (விஜய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், V.J.மரியதாஸ் (தாசன்), V.D.பஸ்ரர் (ராஜன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யூடிற்லக்ஷினின் (மரீன்) மாமனாரும், அரோன், ஏனோக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (09.11.2013) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பி.ப.3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/1. சென்ஜேம்ஸ் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(39826)(12.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
T.P.0212223224.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எம் உயிரில் கலந்த உறவு

## அமரர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

(ஸ்தாபகர் - பாக்கியரத்தினம் காட்வெயர்ஸ் - சங்கானை,
தரன் ரேடர்ஸ், யாழ்ப்பாணம்,
JET STEEL (Pvt) LTD, Colombo)

அன்னை மடியில் : 11.10.1927
ஆண்டவன் அடியில் : 02.11.2011
திதி:- ஸப்தமி


மனிதராய்ப் பிறந்திங்கு மாண்புகழ் பல சுமந்து
தேனினும் இனிதான வாழ்வுதனில் திழைத்திட்டு
அன்போடும் பண்போடும் அவனிதனில் வந்துதித்த
நற்குணத் தந்தையார் இறைவனின் திருப்பாதம்
சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(39822)(2.6.3)

# செல்வநாயகம் ஜெகதீசன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கைதடியை வசிப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் ஜெகதீசன் 05.11.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா- விசாலாட்சி தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், தேவகி (நோர்வே), தர்சினி (பிரான்ஸ்), பிரசாந்தன் (பிரான்ஸ்), சிவசாந்தினி (கனடா), பிறிந்தாயினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீசன் (நோர்வே), நந்தரூபன் (பிரான்ஸ்), ஜெயமோகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற ஆனந்தகோபால், இரத்தினகாந்தி, சிதம்பரநாதன், செந்தில்நாதன், நவநாதன், செல்வநாதன், திருப்பெருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வரட்ண ராஜா, வேலுப்பிள்ளை, தவமணிதேவி, பத்மாதேவி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவின், தர்வின், நிஸ்வின், அஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.11.2013) சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (10.11.2013 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.4B-5/2, கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு - 06.

(39827) (45.6.3)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.
தொ.பே. 077 807 8508/
075 505 6192

## பிரதான வீதி புனரமைப்பு

வடமராட்சி, நவ.9

பருத்தித்துறை- சாவகச்சேரி பிரதான வீதியில் மந்திகைச் சந்தி தொடக்கம் கனகன்புளியடிச் சந்தி வரையான பிரதான வீதி நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

மந்திகைச் சந்தி தொடக்கம் கனகன்புளியடிச் சந்தி வரையான 6 மைலுக்கு மேற்பட்ட தூரம் கொண்ட குறித்த வீதி மிக மோசமாகச் சேதமடைந்திருந்ததால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இருந் தது. இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த வீதியைத் திருத்தி அமைத்துள்ளதால் தற்போது போக்குவரத்து சிரமமின்றி இடம் பெறுகிறது. (வ-8)



## பாவனைக்கு உதவாத வீதி

துணுக்காய், நவ.9

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் முதலாவது யூனிற் பகுதிக்கான பிரதான உள்ளக வீதி மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது. இந்த உள்ளக வீதி. பாலிநகர் ஊடாக பாண்டியன் குளம் பிரதேசத்துக்கு இலகுவாகச் சென்று வருவதற்கு ஏற்றதாக உள்ள போதிலும், சுமார் 25 வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது. முதலாம் யூனிட் சந்தியில் இருந்து குட்டிப் பிள்ளையார் ஆலயச் சந்தி வரையும் சுமார் 2 கிலோமீற்றர் தூரம் புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன் படுத்தும் ஏராளமான மக்கள் தினமும்இடர்களைஎதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-415)

## கச்சான் வியாபாரிகளால் பயணிகளுக்குப் பிரச்சினை

கிளிநொச்சி, நவ.9

பஸ்களில் கச்சான் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 4 ஆம் திகதி வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த பஸ்ஸில் கனகராயன் குளம் பகுதியில் ஏறிய கச்சான் வியாபாரியொருவர் தமது வியாபாரத்தை ஆரம்பித்த போது பயணியொருவர் அவரை முன்னே செல்லுமாறு தெரிவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்தக் கச்சான் வியாபாரி பயணியைத் தாக்கத் தொடங்கினார்.

இதனை அவதானித்த பஸ் சாரதி பஸ்ஸை நிறுத்தி விட்டு பயணியை ஏன் தாக்கினாய் என்று கேட்டவாறு கச்சான் வியாபாரியைத் தாக்கினார்.

பின்னர் அந்தக் கச்சான் வியாபாரி கீழே இறக்கி விடப்பட்டார். இதனால் பயணிகள் தமது பயணத் தைத் தொடர்வதில் தாமதத்தை எதிர்கொண்டதை அவதானிக்க முடிந்தது. (க-18)

## தென்னம் பிள்ளைகள் இலவசமாக வழங்கல்

தென்மராட்சி, நவ.9

சாவகச்சேரி கல்வயல் தெங்கு உற்பத்தியாளர் சங்கத்தின் ஊடாக சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தென்னம்பிள்ளைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

தெங்கு உற்பத்திச் செய்கை நாற்று மேடையில் பயிரிடப்பட்ட தென்னம்பிள்ளைகள் விரைவில் சங்கத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

இவ்வருடத்துக்குரிய அங்கத்துவப் பணம் செலுத்தியோருக்கே இந்தத் தென்னம் பிள்ளைகள் வழங்கப்படவுள்ளதால் இதுவரை தமது அங்கத்துவப் பணத்தைச் செலுத்தாதவர்களை உடனடியாகச் செலுத்துமாறு சங்கச் செயலாளர் அ.பற்குணநாதன் அறிவித்துள்ளார். (வ-9)

### கிளிநொச்சியில் நடைபெற்ற

## இடர் பாதுகாப்பு கலந்துரையாடல்



கிளிநொச்சி, நவ.9

மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படக் கூடிய இயற்கை இடர்களை குறைப்பது தொடர்பான கலந்துரையாடல் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

பெரும் மழையால் பாதிக்கப்படும் பிரதேச செயலக பிரிவுகளில் இடர்களை எதிர்கொள்ளல், அந்தப் பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் தொடர்பான விடயங்கள் முதன்மையாக ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸன், பிரதேச செயலர்கள், தொடர்புடைய திணைக்கள உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உட்படபலர்கலந்துகொண்டனர்.

மாவட்டத்தில் இயற்கை இடர்களை உடனுக்குடன் அறிவிக்கக் கூடிய வகையிலான உபகரணங்களை 'வேர்ள்ட்விஷன்' நிறுவனத்தினர் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### வவுனியாக் குளத்தை

## அழகுபடுத்தும் திட்டம் கைவிடப்பட்ட நிலையில்

வவுனியா, நவ.9

வவுனியாக் குளத்தை அழகுபடுத்தும் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாக இங்குள்ள பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வவுனியா நகரசபையும், நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைந்து செயற்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமான விளம்பரப் பலகை ஒன்றும் குளத்துக்கு முன்புறமாகக் கடந்த இரண்டு வருடங்களாகக் காணப்படுகின்றது.

ஆனால் இந்த ஆண்டு முடிவடையவுள்ள நிலையிலும் இது வரை குளத்தை அழகுபடுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

குப்பைகளும் அசுத்தம் நிறைந்த நீரும் அந்தப் பகுதியில் காணப்படுவதால் சுகாதாரத்துக்குப் பெரும் தீங்காக அமைந்துள்ளது.

வவுனியாக் குளத்தை அழகுபடுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிப்பதுடன் சுற்றாடலின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும் சந்தர்ப்பம் ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பலரும் அழுத்தம் கொடுத்த போதிலும் அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக இத்தகைய பின்னடைவுகள் ஏற்படுவதாக மக்கள் தெரி விக்கின்றனர். அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட வேண்டுமென மக்கள் அதிக எதிர்பார்ப்புடன் இருப்பதைக் காணமுடிகின்றது. (க-402)

## ஆள்சேர்க்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.9

உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றிடமாகக் காணப்படும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு தகைமையுள்ளவர்களை நியமிக்க உள்ளூராட்சிச் சபைகள் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ அறிவித்துள்ளார்.

கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கான குழுவை அமைத்து குழு உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அனுமதி பெறுவதற்காக அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார். (வ-9)

### கரம்பகம் வயல் வெளியில்

## நடைபாதையை புனரமைக்க நிதி

தென்மராட்சி, நவ. 9

சாவகச்சேரி பிரதேச சபையால் கரம்பகம் வயல் வெளியில் நடைபாதையைப் புனரமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கு, ஒட்டுவெளி, கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதி மாணவர்களும் பொதுமக்களும் மற்றும் நெற்செய்கையாளர்களும் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்த உசன் கந்தசாமி ஆலயம் முன்பாக ஆரம்பித்து கரம்பகம் கிராமம் வரை வயல் வெளியில் காணப்பட்ட நடைபாதையே புனரமைக்கப்படவுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையின் வேண்டுகோளின் பிரகாரம் நடைபாதை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

"—"

புனரமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மொழி புரியாத அலுவலரால் மடுக்கல்வி வலயத்தில் அவலம்

முருங்கன், நவ. 9

மடு வலயக் கல்விப் பணிமனையில் கணக்காளர் பதவிக்கு சிங்களத்தில் மட்டுமே உரையாடக் கூடியவர் நியமிக்கப்பட்டுள்ளதால் சிங்கள மொழி தெரியாதவர்கள் தமது கொடுப்பனவுகள் தொடர்பான குறைபாடுகளைத் தெரிவிக்க முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் மடு வலயக் கல்வி அலுவலகத்துக்கு புதியகணக்காளராகப்பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் சிங்களமொழி தெரியாத மடு கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தமக்குரிய சம்பளப் பட்டியலில் ஏற்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக கணக்காளருக்கு எடுத்துக்கூற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கணக்காளருக்கு தமிழ் மொழி தெரியாத காரணத்தால் சிங்கள மொழி தெரிந்தவர்கள் மட்டுமே தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கூடிய நிலை காணப்படுகின்றது.

அரச அலுவலகங்களில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் தெரிந்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மடுக் கல்வி வலயத்தில் தமிழ்மொழி தெரியாத ஒருவர் கடமையில் இருப்பதால் தமிழ் உத்தியோகத்தர்களின் மொழி உரிமை மீறப்படுவதாக பாதிப்படைந்துள்ள உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரியவர்கள் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-14)

## மத்தியஸ்த சபை நாளை கூடும்

கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறாத கரவெட்டி மத்தியஸ்த சபையின் விசாரணைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனத் தவிசாளர் சி.நற்குணலிங்கம் தெரிவித்துள்ளார். (ந-35)

வித்துவ சிரோமணி **கணேசையர்** அவர்களது

## ஐம்பத்தைந்தாவது ஆண்டு அமரத்துவ விழா

**இடம்:-** கணேச முன்பள்ளி முன்றில்

**காலம்:-** இன்று (9.11.2013) சனிக்கிழமை

**நேரம்:-** பிற்பகல் 3.30 மணி

**தலைமை**

**செ.கணேசமூர்த்தி**
(தலைவர் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை)

**பிரதம விருந்தினர்**

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

**மு.நந்தகோபாலன்**
(பிரதேச செயலர் - வலிகாமம் தெற்கு)

**கலாநிதி எஸ்.ஸ்ரீ பிரசாந்தன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர் மொழித்துறை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

**வைத்திய கலாநிதி**

**தி.ஞானசேகர ஐயர் (J.P)**
(தலைவர் - புன்னைநகர் நலன்புரி சங்கம், கொழும்பு)

*அனைவரையும்*
*அன்புடன்*
*அழைக்கின்றோம்*

ஆயாக்கடவை சித்திவிநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபையினரும்
விழாக் குழுவினரும்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.




(39831)(2.3.6)

## வலுவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.9

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களின் தனி மனித ஆளுமையை விருத்தி செய்வதற்கான வலுவூட்டல் செயலமர்வு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நல்லூர் இல.9 பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி அலுவலக நிறுவன நிபுணர் த.கிருபாகரன் வளவாளராகக் கலந்து கொள்ளும் இந்தச் செயலமர்வில் ஆர்வலர்கள் பங்குபற்றலாம். (ந-14)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.9

கொழும்பில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளவுள்ள யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுவனத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். செல்வரதன் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் பட்டம் பெறவுள்ள சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார். (த-400)

## மழலை கலையமுதம் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், நவ.9

இருபாலை எக்ஸ் பிரஸ் இன்ஸ்ரிரியூட் மழலைப் பூங்கா முன்பள்ளியின் மழலைக் கலையமுதம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிறுவனத்தின் 40 ஆம் ஆண்டு நினைவு அரங்கில் நடைபெறவுள்ளது. நிறுவன அதிபர் த.வரதராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-14)

## ஒளி விழா

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கிறிஸ்மஸ் ஒளி விழா எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் மாணவர்களின் இசை நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந-9)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீஸ்காந்தன் (சுரேஸ் லைற் இஞ்சின் உரிமையாளர்) டனுசன்



சிவன் அம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்காந்தன் டனுசன் நேற்று (08.11.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் ஸ்ரீஸ்காந்தன் (சுரேஸ் லைற் இஞ்சின் உரிமையாளர்)-சிவராஜி தம்பதியரின் அன்பு மகனும், டிலக்சனா, தரணிகா, பிரணவன், கஜனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயராஜி, யுகராஜி ஆகியோரின் பெறாமகனும், ராஜாஜி, சிவாஜினி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் அம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு. (39834) (10.6.3)

தகவல்: **ஸ்ரீஸ்காந்தன்**
(தந்தை-சுரேஸ்)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03.09.1961 — மறைவு 16.11.2011

## திருமதி தேவகுஞ்சரி பரம்சோதி

(இடைப்பிட்டி, காரைநகர்)



திதி:- சஷ்டி
(09.11.2013)

ஈரவிழிகளுள் உங்களின் உருவம்
ஈராண்டாக உயிர்த்தே உள்ளது
பேரருட் சக்திப் பேற்றினைப் பெற்ற
ஆருயிர் அன்னை பதம் பணிகின்றோம்
காரிருள் கலைக்கும் குஞ்சரதீபம்
காலா காலமும் வழிகாட்டட்டும்
நேரிலே வாழ்ந்தும் நினைவிலே நின்றும்
பரஞ்சோதியுடன் பண்புறக் கலந்தும்
பாரினில் உயர்ந்திடப் பாதை காட்டிய
தேவகுஞ்சரி திருவடி தொழுவோம்
ஆரினி உள்ளார் அம்மா உன்போல்
அரனடி நிழலில் அமைதி கொள் தாயே!

**- குடும்பத்தினர்.**

354/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C/13808)(2.6.3) **வெங்கடேஸ்வரா.**

# விஷக்கடிக்கு இலக்கானால் உடன் ஆஸ்பத்திரியை நாடவும்

## தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் உயிருக்கு ஆபத்து

தென்மராட்சி, நவ.9

மழை பெய்து வருவதையடுத்து விஷ ஜந்துக்கள் மற்றும் பாம்புகளினால் கடிபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இரவு வேளையில் வெளிச்ச வசதியின்றி வீதியில் நடந்து செல்வோரும் படுக்கையில் வைத்தும் வளவுகள் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுவோருமே பாம்புகளினால் கடியுண்டு வருகின்றனர்.

பாம்புகள் உட்பட விஷ ஜந்துக்களினால் கடிபடுவோரைக் காலங்கடத்தாது உடனடியாக அருகில் உள்ள அரச வைத்திய சாலைகளுக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லுமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

பாம்புக் கடிக்கு ஏற்ற மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் மட்டுமே உள்ளதால் பார்வை பார்ப்பதையோ அல்லது தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதையோ தவிர்க்குமாறும் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் புதன்கிழமை இரவு பாம்புகளினால் கடியுண்ட பாலாவி வடக்கைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வசேந்தன்(வயது-26), வரணி நாவற்காட்டைச் சேர்ந்த சுப்பையா சிவபாக்கியம் (வயது-67) ஆகிய இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு செ.செல்வசேந்தன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (நு-9)

# பணப்பை கொள்ளை

வீதியில் சென்று கொண்டிருந்த நபரிடம் 2 லட்சத்து 16 ஆயிரம் ரூபா பெறுமதியான பணப்பை கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று நவாலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி புனித பீற்றர்ஸ் ஆலயப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் மானிப்பாய் பிள்ளையார் வீதியில் பணப்பையுடன் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபரொருவர் அவரது பணப்பையைப் பறித்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நு-14)

# மரண அறிவித்தல்

## திருமதி அம்பிகையம்மா அப்புலிங்கம்



யாழ்ப்பாணம், மாதகலைப் பிறப்பிடமாகவும் சென்னை, இந்தியாவை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி. அம்பிகையம்மா அப்புலிங்கம் நேற்று (08.11.2013) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற அப்புலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமலிங்கம், சிங்காரவேலு மற்றும் கண்டுமணியம்மா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஷ்பவதி (சுவீடன்), சற்குணலீலா (திருச்சி), ஆனந்தபுவிராசா (லண்டன்), பரஞ்சோதி (பாரிஸ்), விமலராசா (லண்டன்), அமுதா (நோர்வே), உமா (லண்டன்), சுதா (லண்டன்) மற்றும் கிரிகரன் ஆகியோரின் அன்புத் தாயும், தங்கமயில் (இலங்கை), நாகேந்திரம் (திருச்சி), ரூபராணி (லண்டன்), பத்மாவதி (பாரிஸ்), தாரணி (லண்டன்), சிதம்பரநாதன் (நோர்வே), காந்தி (லண்டன்), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பூம்பா (லண்டன்), மீரா (லண்டன்), சுமித்ரா (கனடா), குமரன் (சுவிஸ்), தங்கன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், குமரவேள் (இலங்கை), முருகவேள் ஆகியோரின் பெரியமாமியும், பூங்கோதை (திருச்சி), சேந்தன் (சென்னை), மைந்தன் (சுவீடன்), வேந்தன் (கனடா), பூங்குழலி (லண்டன்), ஆனந்தரூபன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), பூங்கொடி (சத்தியமங்கலம்), பஜனரூபி (பவானி சாகர்), பத்மலோஜினி (சுவீடன்), தளிரவன் (கொயம்புத்தூர்), தளிர்நங்கை (பாரிஸ்), கனிகை (லண்டன்), எழுபரிதி, பிரிதிகை (லண்டன்), கிருஷந்தன் (நோர்வே), பூங்கவிதை (நோர்வே), பூங்காயினி (நோர்வே), சனந்தன் (லண்டன்), பூங்கயல் (லண்டன்), கவினா (லண்டன்), உதயா (சென்னை), பூபாலசிங்கம் (லண்டன்), உஷா (லண்டன்), வினோஜிதா (லண்டன்), மதி (சத்தியமங்கலம்), சுந்தரபாலன் (பவானிசாகர்) ஆகியோரின் பேர்த்தியும், கதிரவன், கதிரொளி (சென்னை), மது, தருண் (சுவீடன்), ஹரி, ஹரினி, ஆதனா, சால்வின் (லண்டன்) துளிர், துர்க்கா (சத்தியமங்கலம்), கிருபாலினி, தனுபாலினி, மகிழன் (பவானி சாகர்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தபுவிராசா (ஐயா) - 00442089040949, 00447949562723 (லண்டன்)
விமலராசா - 00447539646919 (லண்டன்)
சேந்தன் - 00918939392334, 00919092223259 (சென்னை)
குமரவேள் - 077 6508517 (இலங்கை)

(39858)
(10,14)

# ஊடகம் தொடர்பான விரிவுரை

கொழும்பு, நவ. 9

கொழும்பு பல்கலைக்கழகத்தில் உலக ஊடகக் கோட்பாட்டின் மீதான கருத்தாடல் என்னும் தலைப்பில் விரிவுரையொன்று இடம்பெறவுள்ளது.

இதனை அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றின் தகவல் பரிமாற்றத்துறைத் தலைவரும், பேராசிரியருமான சகுந்தலா ராவ் நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும், 4.30 மணிக்கும் இடையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எம்.பி.ஆரியபால கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆங்கிலத்தில் இடம்பெறவுள்ள இந்த விரிவுரைக்கான சிங்களமொழி பெயர்ப்பு வசதிகள் வழங்கப்படுமென நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# 12 மயானங்கள் புனரமைப்பு

வலி வடக்கு, நவ. 9

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 12 இந்து, கிறிஸ்தவ மயானங்களை அபிவிருத்தி செய்வதற்கென 2013ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பன்னிரண்டு மயானங்களுக்கும் சராசரியாக 150, 000 ரூபா ஒதுக்கப்பட்டன. அத்துடன் அந்தந்த மயானங்களின் அபிவிருத்திச் சபைகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வேலைத் திட்டங்களை நிறைவு செய்வதென சபையின் மாதாந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலான மயான அபிவிருத்திச் சபைகள் வேலையினைப் பூர்த்திசெய்து கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டுள்ளன. என்று பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைக்குட்பட்ட மயானங்கள் அனைத்தும் பிரதேச சபைத் தவிசாளரின் மேற்பார்வையின் கீழும் புலம் பெயர் வாழ் தமிழ் மக்களின் நிதிப்பங்களிப் பின் மூலமும் மிகச்சிறப்பான முறையில் சுற்றுமதில், எரிகொட்டகை மயான வளைவு, வாயிற்கதவுகள், நுழைபாதைகள், கிணறு, மலசலகூடம், இளைப் பாறும் மண்டபம், காவலாளி அறை, நீர் மற்றும் மின்விநியோகம் போன்ற விடயங்கள் அந்தந்த அபிவிருத்திச்சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்றிட்டத்துக்குப் பிரதேச சபையும் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது. பொதுமக்களினதும் ஊடகங்களினதும் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்குள்ளாகியிருந்த முக்கியமான பெரும்பாலான மயானங்கள் தற்போது புதுப்பொலிவுடன் காணப்படுகின்றன. தொடர்ச்சியான பராமரிப்புக்கென மயான அபிவிருத்திச் சபையினரால் கட்டண அறவீடும் நடைமுறைப்படுத்தப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (நு-86)

# மரத்தில் குண்டு

யாழ்ப்பாணம், நவ.9

மரத்தில் கொளுவிவிடப்பட்ட நிலையில், கோப்பாய் மத்தி பகுதியில் கைக்குண்டு ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மரத்தில் கொளுவிய நிலையில் கைக்குண்டு காணப்படுவதாக நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்ட அந்தக் கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (ஓ-14)

# கஞ்சா வைத்திருந்த மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ.9

வவுனியா பொலிஸ் பிரிவில் கடந்த வாரம் 3.5 கிராம் கஞ்சாவை வைத்திருந்த 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கடந்த 4 ஆம் திகதி பொன்னரசன் குளம் பகுதியில்ஒரு கிராம் கஞ்சாவையும் கடந்த 5 ஆம் திகதி எள்ளப்பன் மருதகுளம் பகுதியில் 2 கிராம் கஞ்சாவையும், கடந்த 2 ஆம் திகதி கோயில் குளம் பகுதியில் 5 மில்லிகிராம் கஞ்சாவையும் வைத்திருந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-14)

## தவறிவிட்டது

மா. நிஷசங்கர் என்பருடைய அடையாளஅட்டை (782875523V), சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி ஆவணங்கள், NP GX 9399 இலக்க ஆட்டோவின் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியன அடங்கிய இரண்டு பைகள் நல்லூர் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 9565507

(39855)
(10,14)

# சைக்கிள் ஒப்படைப்பு

சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட லுமாலா சைக்கிளொன்று சாவகச்சேரி பொலிஸாரால் புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நு-9)

## மன்னார் வீதி, முழங்காவில்
## ஐயப்பன் ஆலய வருடாந்த திருவிழா

மூன்றாவது வருடமாக மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.
இவ்வருடம் மணிகண்டனாக ஐயப்பனை வழிபட உள்ளோம். ஆக்வே மாலை போடும் சாமிகள் முன் கூட்டியே ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

குரு - சாமி,
இரா - அப்பன் - சாமி,
அச்சுவேலி.
077 056 4789

யோகா - சாமி (தலைவர்),
077 283 3305

# வேலணை பிரதேச சபை
## 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

08.11.2013 ஆம் திகதி இப் பத்திரிகையில் பிரசுரித்த விளம்பரத்துக்கு மேலதிகமாக வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட புங்குடுதீவு மடத்துவெளி இளைப் பாற்று மண்டபமும் சிற்றுண்டிச் சாலையும் 01.01.2014 தொடக்கம் 31.12.2014 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

| இல. | சந்தை பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப் படும் கேள்விவைப்புப் பணம் (VAT தவிர்த்து) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 01 | மடத்துவெளி இளைப் பாற்று மண்டபமும் சிற்றுண்டிச் சாலையும் | 600.00 | 500.00 | - | 10,000.00 |

கேள்வி சம்பந்தமான நிபந்தனைகள் 08.11.2013 ஆம் திகதிய விளம்பரத்துக்கு அமைவாக உள்ளது

**சின்னையா சிவராசா,**
**தவிசாளர்,**
**பிரதேச சபை, வேலணை.**

(சி/12216)
(10,8)

# காணவில்லை



கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த **கருணாநிதி (கரன்) தாட்சாயினி** (வயது 27) என்பவர் கடந்த (06.11.2013) புதன்கிழமையில் இருந்து மானிப்பாய் வங்கிக்குச் சென்றபோது காணவில்லை.
கண்டவர்கள் தயவு செய்து உடன் அறியத்தரவும்.

தொடர்பு:-
077 007 3151, 075 895 7343

(29838)(2,6)

# மாநாட்டின் முதல் நாள் அமர்வில் கமலேஷ் சர்மா, சாள்ஸ் உரை

கொழும்பு,நவ.9
பொதுநலவாய மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
முதல்நாள் அமர்வில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரிட்டன் இளவரசர் சாள்ஸ், பொதுநலவாயத்தின் தற்போதைய தலைவியும், ஆஸ்திரேலிய முன்னாள் பிரதமருமான ஜூலியா கிலார்ட் ஆகிய நால்வரும் உரை நிகழ்த்துவதற்கு ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை வரை வெளி நாட்டுப் பிரதிநிதி களும் அரச தலைவர்களும் இலங்கைக்கு வருகை தரவுள் ளனர்.
அதனை முன்னிட்டு கட்டுநாயக்க கொழும்பு, காலி, ஹம்பாந் தோட்டை, மத்தள, கண்டி, கல்கிசை ஆகிய பகுதிகளில் என்றுமில்லாத வகையில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள் ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாடு தொடர்பில் செய்தி சேகரிக்கு முகமாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆயிரம் ஊடகவியலாளர்கள் பங்குபற்றவுள்ளனர் என்றும் செயலர் சரித்த ஹேரத் கூறினார். (ச)

# கடலில் மீன்பிடிக்க அதிகாரப்பத்திரம்

கொழும்பு,நவ.9
இலங்கையின் கடல் பிரதேசத்துக்குள் மீன்பிடிக்க அதிகாரப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.
இதுதொடர்பாக மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தில் திருத்தங்களைச் சேர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
புதிய திருத்தங்களின் கீழ் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். அவரால் இலங்கையின் கடற் பிரதேசத்தில் மீன்பிடிக்க அதிகாரப் பத்திரத்தை வழங்கவுள்ளார்.
அந்த அதிகாரப் பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு முரணாக வேறுபட்ட விதத்தில் பெருங்கடலில் மீன்பிடிச் செயற்பாடுகளில் யாரும் ஈடுபடமுடியாது என்று அறிவுறுத்தப்படும். (ச-22)



தேசத்தின் மகுட தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் விருந்தினர்கள் 'பாண்ட்' வாத்தியத்துடன் அழைத்துவரப் பட்டனர்.

## துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

கொழும்பு,நவ.9
முனமல்கஸ்வெவ, சாலியவெவ பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சாலியவெவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் இகலபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# தாதியர் பயிற்சிக்கு 6,025 பேர் சேர்ப்பு

## 10 இல் கடிதங்கள் கையளிப்பார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,நவ.9
தாதியர் பயிற்சிக்காக ஒரே தடவையில் 6,025 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.
அதே தினத்தில் தாதியர் பயிற்சியை முடித்துக் கொண்ட 3,500 பேருக்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
புதிதாக பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் 6,025 பேருக்கும், பயிற்சியை முடித்துக் கொண்ட 3,500 பேருக்கும் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கவுள்ளார்.
கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறும் நிகழ்வில் வைத்தே ஜனாதிபதி இந்தக் கடிதங்களை வழங்குவார் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



தற்போது அரச வைத்தியசாலைகளில் தாதியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வருடாந்தம் தாதியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுச் செல்கின்றனர் என்று அவர் கூறினார்.
2002 முதல் 2004 வரையிலான காலப் பகுதியில் தாதியர், சேவைக்கு ஆள்கள் சேர்த்துக் கொள்ளப்படாததால் பற்றாக்குறை அதிகமாகிவிட்டது என்று அவர் கூறினார்.
நாட்டிலுள்ள சகல தாதியர் பயிற்சிக் கல்லூரிகளினது வசதிகளை மேம்படுத்தப்படுவதற்காக ஒவ்வொரு கல்லூரிகளுக்கும் தலா 10 மில்லியன் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 18 தாதியர் பயிற்சிக் கல்லூரிகளின் தரம் உயர்த்தப்பட்டு அவற்றின் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.
6025 பேருக்கான இடவசதி பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் தற்காலிக கட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## நிதி மோசடி செய்த 230 பேர் மாட்டினர்

கொழும்பு,நவ.9
நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் மூன்று வாரங்களில் 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பு குற்ற விசாரணை பிரிவுக்கு கிடைத்த முறைப்பாடுகளை விசாரித்ததன் பின்னரே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நிதிமோசடி குறித்து கொழும்பு குற்ற விசாரணை பிரிவுக்கு 549 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.
இந்த முறைப்பாடுகளில் வெளியாகும் தகவலுக்கமைய 22 கோடி 50 லட்சம் ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மார்புப் புற்று நோயால் 2000 பெண் பாதிப்பு

கொழும்பு,நவ.9
ஒவ்வோர் ஆண்டிலும் மார்பகப் புற்று நோயால் 2000 பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் வருடாந்தம் 470 பேர் வரை உயிரிழக்கின்றனர்.
இந்தத் தகவலை தேசிய புற்றுநோய் ஒழிப்புப் பிரிவின் சமூகவியல் மருத்துவ நிபுணர் திருமதி சிரந்திகா வித்தான தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் புற்று நோய்களால் துன்புறும் பெண்களில் நூற்றுக்கு 25 பேரும் மார்பகப்புற்று நோயாளர்களே ஆவர். தற்போது மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 12,000 பெண்கள் சிகிச்சைகளைப் பெற்று வருகின்றனர்.
மேல் மாகாணம் மற்றும் கண்டி மாவட்டத்திலேயே



மார்பகப்புற்றுநோயால் துன்புறும் பெண்கள் அதிகளவில் இனம் காணப்பட்டுள்ளனர்.
உலகளாவிய ரீதியில் நோக்கும் போது வருடாந்தம் மார்பகப்புற்றுநோயால் 1.5 மில்லியன் வரையிலான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.-என்றார். (ச-22)


## ஓய்வூதிய திட்டத்தில் இணைக

கொழும்பு,நவ.9
ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு விவசாயிகள், மீனவர்கள் ஆகியோருக்கு சமூக பாதுகாப்பு சபை அழைப்பு விடுத்துள்ளது.
இது தொடர்பில் சபையின் தலைவர் சுமண ஆரிய தாஸ தெரிவித்ததாவது:-
சமூக பாதுகாப்பு சபையில் 4 லட்சத்து 50 ஆயிரத்து 588 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளார்கள். அவர்களில் 4 ஆயிரத்து 684 பேர் மாதாந்தம் ஓய்வூதியம் பெறுகின்றனர். அரச ஓய்வூதியத்திட்டத்தில் 18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இணைத்துக் கொள்ள முடியும். -என்றார். (ச-10)

# சட்டவிரோத மீன்பிடியால் 97, 500 மில்லியன் நட்டம்

## மீன் ஏற்றுமதியாளர்களின் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,நவ.9
இலங்கைக்குச் சொந்தமான வடக்குக் கடலில் சட்டவிரோதமாக இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதால் ஆண்டொன்றில் 97, 500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகிறது.
இந்தத் தகவலை இலங்கை மீன் ஏற்றுமதியாளர்களின் சங்கம் மீன்பிடித்துறை



அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.
சட்டவிரோத மீன்பிடியை உடன் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சங்கம் மீன்பிடித்துறை அமைச்சரிடம் கேட்டுள்ளது.
தென்னிந்திய மீன்பிடிப் படகுகளால் இலங்கை மீனவ சமூகத்துக்கு ஆண்டொன்றில் ஏற்படும் பாதிப்பு 10 மில்லியன் வரையிலானது என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.
இந்திய மீனவர்கள் இலங்கை மீன் வளத்தைச் சூறையாடுவது பேரிழப்பாகும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-22)

# பொதுநலவாயத் தலைவர்களுக்கு காணாமல்போனோர் விவர மனு

## 13, 14 ஆம் திகதிகளில் கொழும்பில் உறவுகள் திரண்டு போராட்டம்

காணாமற்போனோர் தொடர்பான விவரங்களடங்கிய மனுவை பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கவரும் வெளிநாட்டு அரச தலைவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை சிவில் அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன.

இதனை நேற்று உறுதிப்படுத்திய காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன், காணாமற்போனோர் குறித்து சுயாதீன விசாரணைப் பொறிமுறையொன்றை உடன் ஏற்படுத்துமாறு இலங்கைக்கு உலக நாடுகள் அழுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் மகஜரூடாக விடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதை இலங்கை ஏற்கமறுக்கும் பட்சத்தில் அனைத்துலக சமூகம் நடவடிக்கையில் இறங்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநாட்டில் பங்கேற்கவரும் அரச தலைவர்களிடம் மனு கையளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுமாயின், கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களினூடாக அது ஒப்படைக்கப்படும் என்றும் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்வரும் 13ஆம் திகதி பிற்பகல் 4 மணி முதல் மறுநாள் மாலை 5 மணிவரை காணாமற்போனோர் சம்பந்தமாக, கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தவும் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

காணாமற்போனோரின் குடும்ப ஒன்றியம், காணாமற் போனோரைத் தேடி அறியும் குழு, ஐக்கியத்திற்கான மக்கள் இயக்கம் உட்பட மேலும் சில சிவில் அமைப்புகள் கூட்டாக இணைந்து இந்தப் போராட்டத்தை ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவுக்குப் பின்னால் உள்ள மைதானத்தில் நடத்தவுள்ளன.

# இளம் பெண்ணை காணவில்லை

வலி.தென்மேற்கு, நவ.9

பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அணிந்துகொண்டு தன்னந்தனியே வங்கிக்குச் சென்ற திருமணம் செய்த இளம்பெண்ணொருவர் மூன்று தினங்களாகியும் வீட்டுக்குத் திரும்பவில்லை.

மனைவி காணாமற்போனமை குறித்து கணவன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 26 வயதுடைய மேற்படி பெண் 6 வருடங்களுக்கு முன் காதல் திருமணம் செய்து கணவனுடன் கோண்டாவிலில் வாழ்ந்து வருகிறார்.

வழமைபோல் பல இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, சங்கிலி, காப்பு போன்ற தங்க நகைகளை அணிந்துகொண்டு கடந்த 7 ஆம் திகதி ஆனைக்கோட்டையில் உள்ள பெற்றோரின் வீட்டுக்குச் சென்ற குறித்த பெண் அங்கிருந்து முற்பகல் 11 மணியளவில் மானிப்பாயிலுள்ள வங்கி ஒன்றுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றுள்ளார் . இவர் மூன்று நாள்களாகியும் வீட்டுக்குத் திரும்பிவரவில்லை. இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் கணவர். (து-115)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்குக்கு

டன் அவர் இங்கு வரக்கூடாது.

இவ்வாறு மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்றால் அது ஈழத்தமிழர்களுக்கும், கோடிக்கணக்கான தமிழக மக்களுக்கும் அவர் இழைக்கும் மாபெரும் துரோகமாகும் என்றும் மன்னார் ஆயர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் நேற்று 'உதயனி'டம் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் மனித உரிமை மீறல்களில் - போர்க்குற்றங்களில் இலங்கை அரச படைகள் ஈடுபட்டுள்ளன. ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் உறவுகளைக் கொன்றழித்தும், காணாமற்போகச் செய்தும் உள்ளன. ஆனால், இதை இலங்கை அரசு நியாயப்படுத்த முயல்கின்றது.

இந்நிலையில், கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்றால் அது இலங்கை அரச படைகள் புரிந்த மனித உரிமை மீறல்களில் - போர்க்குற்றங்களில் தவறேதும் இல்லை என்பதைப் பறைசாற்றிக் காட்டும். அத்துடன், ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் உதவியுடன் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கும் அர்த்தம் இல்லை என்பதையும் எடுத்துக்காட்டும்.

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் எக்காரணம் கொண்டும் இந்தியப் பிரதமர் பங்கேற்கக் கூடாது. இதைத்தான் ஈழத் தமிழர்களும், கோடிக் கணக்கான தமிழக மக்களும் விரும்புகின்றனர்.

எனவே, இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சரின் அழைப்புக்கிணங்க வடக்குக்கு பயணம் செய்து போரால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க வேண்டும். மாநாட்டில் பங்கேற்கும் நோக்குடன் அவர் இங்கு வரக்கூடாது" என்றார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் இலங்கை வந்து கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கவேண்டும் என்று மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார் என நேற்று ஊடகமொன்றில் வெளியான செய்தி தவறானது எனவும், அது முற்றிலும் திரிபுபடுத்தப்பட்ட செய்தி எனவும் மன்னார் ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்புயோசப் தெரிவித்தார். (சு-சி)

### தென்பகுதி

நின்று கடல் தொழிலில் ஈடுபட வருகை தரவுள்ள தென்பகுதி மீனவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று இடம் பெற்றது.

நேற்று மு.ப. 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

பிரதான வீதியை மறித்து சுலோகங்களை ஏந்தியவாறு மீனவர்கள் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

மீனவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி பிரிமுஸ் சிராய்வா, அயூப் அஸ்மின், மன்னார் நகர சபை முதல்வர் எஸ்.ஞானப்பிரகாசம், நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.பற்றிக் வினோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் காலை 11 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தா, மன்னார் மாவட்டக் கடல் தொழில் உதவிப்பணிப்பாளர் எம்.மெரான்டா ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடினர்.

இதனைத்தொடர்ந்து கடற்தொழில் அமைச்சருக்கு எழுதிய மனுவை மீனவர்கள் அதிகாரிகளிடம் கையளித்தனர். (த-12)

### வழக்கம்பரை

சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், பா.கஜதீபன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

மௌனப் பிரார்த்தனையின் முடிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் மனு கையளிக்கப்பட்டது.

குறித்த மனுவில், -

♦ வலி. வடக்கில் மேற் கொள்ளப்பட்டு வரும் வீடழிப்பு நடவடிக்கைகளை நிறுத்தி அந்தப் பகுதியில் மக்களை குடியேற்ற வேண்டும்.

♦ தம்புள்ள காளி கோயில் இடிக்கப்பட்டமை மற்றும் அந்தச் சுற்றாடலில் வாழ்ந்த மக்கள் இருப்பிடங்களை இழக்க வேண்டிய நிலைமை. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

♦ சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான வன்முறை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் சுயமாக வாழக் கூடிய நிலை எற்படுத்தப்பட வேண்டும்.

♦ காணாமற்போனோர் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

♦ ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

♦ விசாரணையின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் - என்று வலியுறுத் தப்பட்டது. (த-5)

### யாழ். பல்கலை

மாவீரர் தின நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதைத் தடுப்பதற்காகவே இன்று இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பொதுநலவாய மாநாட்டை ஒட்டி பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களை வெளியேறுற்றுமாறும், விடுதிகளில் மாணவர்கள் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டாம் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பல்கலைக்கழகங்களுக்கு விடுமுறை வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் யாழ். பல்கலைக்கழகம் மட்டும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை மூடப்படும் என்றும் மறுநாள் 2 ஆம் திகதியிலிருந்து கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆயினும் எதிர்வரும் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் மாவீரர் தின நிகழ்வுகளை மாணவர்கள் பல்கலைக் கழகத்திலும் ஏற்பாடு செய்து நடத்துவார்கள் என்ற அச்சம் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெறுவதைக் குழப்பும் வகையில் சீருடையினர் அடக்குமுறைகளை மேற்கொண்டதுடன் பல்கலைக்கழக விடுதிகளுக்குள்ளும் புகுந்து அடாவடியில் ஈடுபட்டனர். இதனை எதிர்த்து மறுநாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதன்காரணமாகவே இம்முறை டிசெம்பர் முதலாம் திகதி முதல் பல்கலைக்கழகத்தை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது குறித்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அரையாண்டு காலப்பகுதிக்கான விடுமுறை காரணமாக டிசெம்பர் முதலாம் திகதி வரை விடுமுறை வழங்குமாறு பீடாதிபதிகள் கோரியிருந் தனர். இதற்கமையவே இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது - என்றார். (து-4)

### தமிழருக்கு

களைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய சரித்திரக் கடமை பிரிட்டனுக்கு இன்றும் இருக்கின்றது. இது விடயத்தில் இந்தியாவை விடவும் பிரிட்டனுக்கே பொறுப்பு அதிகம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேற்குலகைப் பொறுத்தமட்டில் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் மாத்திரமே அங்கம் வகிக்கின்றது. அமெரிக்கா அந்த அமைப்பில் இல்லை. ஆகவே, தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க சர்வதேச மட்டத்திலான போராட்டத்தை இதனூடாக முன்னெடுக்கும் சக்தி பிரிட்டனுக்கு இருக்கின்றது.

அதேவேளை, நாமும் எங்கள் சொந்தங்களுக்காக தொடர்ந்தும் அனைத்து வழிகளிலும் போராடுவோம். தற்போதுகூட ஈழத்தமிழ் இளைஞன் பரமேஸ்வரன் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்" என்றார். (து-4)

### மக்களிடையே

பெறும் இந்த வேளையில் இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமையானது சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி மற்றும் தையிட்டி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது நலன் புரி நிலையங்களில் வசித்து வரும் மக்களை இராணுவத்தினர் நேற்றைய தினம் பலாலி கிழக்குப் பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கு மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எனினும் அந்தப் பகுதிகளில் ஏற்கனவே வாழ்ந்த மக்கள் தற்போது பருத்தித்துறை இன்பருட்டி, எரிஞ்சகரைப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது உறுதிக் காணிகளில் மயிலிட்டி மற்றும் தையிட்டி மக்களை குடியேற்றுவதன் மூலம் இரு தரப்பு தமிழ் மக்களிடையேயும் மோதலை ஏற்படுத்த இராணுவத்தினர் முயற்சிக்கின்றனர்.

மேலும் மீள்குடியமர்வு நடவடிக்கை என்பது சிவில் நடவடிக்கை. அந்தந்த மாவட்ட அரச அதிபராலேயே மேற்கொள்ளப்பட வேண்டியதொன்று. ஆனால் இங்கு இராணுவத்தினரே சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றனர். பிரதேச செயலருக்கோ, அரச அதிபருக்கோ தெரியாமல் அவர்களது பங்களிப்பு இல்லாமல் முற்றுமுழுதாக இராணுவத்தினராலேயே இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இராணுவ ஆட்சி இங்கு நடைபெறுவதையே இது எடுத்துக் காட்டுகின்றது- என்றார். (ங-5)

### பலாலி

அழைத்துச் சென்று இராணுவத்தினர் காண்பித்துமுள்ளனர்.

எனினும் தம்மை தமது சொந்த இடங்களில் குடியமர்த்தாது உயர்பாதுகாப்பு வலயத்தின் வேறு இடத்தில் குடியமர்த்துவதற்கு இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையை அந்த மக்களில் ஒரு பகுதியினர் நிராகரித்துள்ளனர்.

தங்களுடைய சொந்த இடங்களிலேயே தாம் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை மக்களை மீளக்குடியமர்த்தவென இராணுவத்தினரால் நேற்றைய தினம் கொண்டு சென்று காண்பிக்கப்பட்ட பிரதேசங்களைச் சொந்த இடமாகக் கொண்ட 2 ஆயிரம் குடும்பங்கள் வரையில் மீளக்குடியமர்வதற்காக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்துள்ளன. ஆயினும் அவர்களைவிடுத்து வேறு பிரதேச மக்களை அங்கு இராணுவத்தினர் ஏன் குடியமர்த்துகின்றனர் என்று மக்களிடையே சந்தேகம் தோன்றியுள்ளது. (ங-5)

### கைக்குண்டுகள்

ரவைகள் மற்றும் கைக்குண்டுகள் இராணுவத் தினரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (கு-14)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி



யாழ்ப்பாணம், நவ.9
சிவோத்தமன், ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தில் நடைபெற உள்ளது. மகேசன் விளையாட்டுக் கழகத்தினால் இந்தச் சுற்றுப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையே ஆறுபேர் கொண்ட ஐந்து பந்து பரிமாற்றங்களை உடைய மென்பந்துச் சுற்றுப் போட்டியாக இது இடம்பெறும். (த-422)

# வென்றது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், நவ.9
அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினரால் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 24 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 24 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சிவதர்சன் 14 ஓட்டங்களையும், செல்வா 17 ஓட்டங்களையும், றொசாந் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளையும், அனஸ்ராஜ் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 42 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மதுஷன் ஆட்டம் இழக்காமல் 52 ஓட்டங்களையும், ஜெயதர்சன் 20 ஓட்டங்களையும், சஞ்சீவன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக பிரணவன் 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், விஜிதரன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும், றொசாந் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சிவதர்சன் 37 ஓட்டங்களையும், றொசாந் 17 ஓட்டங்களையும், சாருஷன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 14 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்கினை வீழ்த்தினர்.

ஆட்ட விதிமுறைப்படி யாழ்.மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸில் வெற்றி பெற்றது. (த-23)

# நட்சத்திர அணிகளின் ஆட்டங்களில் வென்றோர்

யாழ்ப்பாணம், நவ.9
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் நட்சத்திர அணிகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழுறோயல் விளையாட்டுக் கழக அணியினர் 8:2என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)






நாவற்குழி சான்றோர் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் கழக வீரன் வில்சன் அவர்களின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரில் சம்பியனான போர்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினரை படத்தில் காணலாம். (த-23)

# நெற்கொழு கழுகுகள் வெற்றி

வடமராட்சி,நவ.9
வல்வெட்டித்துறை நகர சபையினால் நடத்தப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நெற்கொழு கழுகுகள் வெற்றிபெற்றுள்ளது.

நகரசபை எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட்போட்டி ஒன்றை வல்வெட்டித்துறை நகர சபை நெற் கொழு மைதானத்தில் நடத்தப் பட்டது.

இப்போட்டிகளில் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம்,



வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம், வல்வை விளையாட்டுக்கழகம் தொண்டமானாறு ஒற்றுமை விளை யாட்டுக்கழகம், கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இரண்டு நாள்களாக இடம்பெற்ற துடுப் பாட்டப் போட்டிகளில் இறுதிச்சுற்றுக்கு வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகமும், நெற்கொழு விளையாட் டுக்கழகமும் தெரிவாகின.

இரு அணிகளும் களத்தில் இறங்கியதில் கழுகுகள் விளையாட்டுக் கழகம் ஓர் ஓட்டத்தினால் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (த-8)

# ஜப்பான் கராத்தே போட்டியில் இலங்கை நடுவர்களாக இருவர்



யாழ்ப்பாணம், நவ.9
ஜப்பானில் மியாசாக்கி நகரில் அண்மையில் நடைபெற்ற யுனிவேர்சல் சோட்டோகான் கராத்தே ஒன்றியத்தின் 15 ஆவது சர்வதேச கராத்தே சுற்றுப் போட்டியில் இலங்கையில் இருந்து கராத்தே பிரதம பயிற்றுவிப்பாளர்களான சென்செய் அன்ரோ டினேஸ், சென் செய் அப்துல் ரவூப் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றியுள்ளனர்.

இதன்போது ஜப்பானில் கிராண்ட் மாஸ்டர் கௌச்சி வுக்காமிசு வினால் நடத்தப்பட்ட பயிற்றுனர்களுக்கான தொடர் பயிற்சி பட்டறையிலும் இவர்கள் பங்கேற்றனர். (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்தில் அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் நட்சத்திர அணிகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோத வுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப. 3.30 மணி
வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்.

மாலை 4.30 மணி
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம். (த-23)

★★★


யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

# வென்றது 'ஏ' இலங்கை

இடம்பெற்றுவரும் உள்ளூர் கிரிக்கெட் தொடரில் நேற்று முன் தினம் நடந்த போட்டியில் இலங்கை 'ஏ' அணி வெற்றி பெற்றுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணிக்கெதிரான இப்போட்டியில் இலங்கை 'ஏ' அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை 'ஏ' அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 295 ஓட்டங்களைப் பெற்றது.
12 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முதலாவது இலக்காக திலகரட்ண டில்ஷானை இழந்த அவவணி, 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது குமாா சங்கக்காரவை இழந்தது. எனினும் மஹேல ஜெயவர்த்தன, அஷன் பிரியஞ்சன் இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தியதோடு, இறுதி நேரத்தில் இஷான் ஜெயரத்ன அதிரடியாக ஆடியிருந்தார்.
துடுப்பாட்டத்தில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி சார்பாக மஹேல ஜெயவர்த்தன 88 பந்துகளில் 96 ஓட்டங்களையும், அஷன் பிரியஞ்சன் 57 பந்துகளில் 46 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 54 பந்துகளில் 39 ஓட்டங்களையும், மிலிந்த சிறிவர்தன 40 பந்துகளில் 37 ஓட்டங்களையும், இஷான் ஜெயரத்ன 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இலங்கை 'ஏ' அணி சார்பாக சத்துரங்க டீ சில்வா 4 இலக்குகளையும், ஷமிந்த எரங்க, விஷ்வா பெர்னான்டோ, திஸர பெரேரா, சீக்குகே பிரசன்ன ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
296 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை 'ஏ' அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது மழை குறுக்கிட்டதன் காரணமாக இலங்கை 'ஏ' அணிக்கான இலக்காக 44 ஓவர்களில் 251 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அவ்வணி 44 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
குசால் ஜனித் பெரேரா விரைவாக ஆட்டமிழந்த போதிலும், உபுல் தரங்க, டினேஷ் சந்திமால் இருவரும் இரண்டாவது இலக்குக்காக 114 ஓட்டங்களைப் பகிர்ந்ததோடு, தொடர்ந்தும் இணைப்பாட்டங்கள் பகிரப்பட்டன. இறுதி நேரத்தில் சீக்குகே பிரசன்னவின் அதிரடி அவ்வணிக்கான வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.
துடுப்பாட்டத்தில் இலங்கை 'ஏ' அணி சார்பாக உபுல் தரங்க 95 பந்துகளில் 96 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 68 பந்துகளில் 53 ஓட்டங்களையும், சீக்குகே பிரசன்ன 30 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இலங்கை கிரிக்கெட் சபை பதினொருவர் அணி சார்பாக சச்சித்திர சேனநாயக்க 3 இலக்குகளையும், லசித் மலிங்க, அஜந்த மென்டிஸ், இஷான் ஜெயரத்ன ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (கு)

Sri Lanka Cricket

# கிறேம் ஸ்மித் விலக்கல்



தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவரான கிறேம் ஸ்மித் பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதையையடுத்தே அவர் இந்தத்தொடரிலிருந்து விலக்கப் பட்டுள்ளார்.
பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த 2 போட்டிகளிலும் கிறேம் ஸ்மித் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுக்கிடை யிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் இர்பானின் பந்து வீச்சினால் கிறேம் ஸ்மித் தலையில் தாக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடியிருந்தார்.
அத்தொடரைத் தொடர்ந்து இடம் பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் கிறேம் ஸ்மித் பங்குபற்றியிருந்த போதிலும், அதன் பின்னர் தலையில் பந்து தாக்கப்பட்டமைக்கான அறிகுறி களை வெளிப்படுத்தியிருந்தார். இதன் காரணமாக நேற்று முன் தினம் இடம்பெற்ற 3ஆவது போட்டி யிலும் அவர் பங்குபற்றியிருக்க வில்லை.
தலையில் பந்து தாக்கப்பட்டதைத் தொடர்ந்து கிறேம் ஸ்மித்துக்கு எம்.ஆர்.ஐ ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன்போது அவருக்கு எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை நிர்வாகம் அறிவித்துள்ளது. ஆனால் தற்போது அவருக்கு தலையிடி, பார்வைக் குறைபாடு ஆகியவை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, கிறேம் ஸ்மித் தென்னாபிரிக்காவுக்கு உடனடியாகத் திரும்பவுள்ளதுடன், அங்கு அவருக்கு 2 வார ஓய்வு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (கு)

# சச்சின் விளையாடும் போட்டியை காண ஆசைப்படும் ஷாருக்கான்



கிரிக்கெட் உலகின் மிகப்பெரிய ஜாம்பவானான சச்சின் டெண்டுல்காரின் கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகள், கொல்கத்தா மற்றும் மும்பாயில் நடைபெறுகிறது.
சச்சினின் தீவிர ரசிகராக உள்ள மும்பாய் பட உலகின் கதாநாயகன் ஷாருக்கான், மும்பாய் வான்கடே மைதானத்தில் கள ஊழியர்களுடன் மோதிக்கொண்டதையடுத்து நடந்த மோதலையடுத்து அந்த மைதானத்துக்குள் நுழைய அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இதனால், கொல்கத்தாவில் நடந்து வரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சச்சினின் விளையாட்டைப் பார்வையிட ஷாருக்கான் முடிவு செய்துள்ளார்.
இது குறித்து அவர் கூறியதாவது:-
கொல்கத்தாவில் நடைபெறும் திரைப்பட விழாவில் கலந்துகொள்ள அங்கு செல்கிறேன். நாளை ஞாயிறன்று சச்சின் டெண்டுல்கர் கலந்துகொள்ளும் கடைசி போட்டிக்கு முந்தைய டெஸ்ட் போட்டியைப் பார்வையிட முயற்சிப்பேன். நிச்சயம் சச்சின் விளையாட்டை அங்கு கண்டு ரசிப்பேன். வாய்ப்பிருக்கும் பட்சத்தில் அவரை நேரில் வாழ்த்துவேன். சில இடங்களுக்கு நான்கூட செல்ல அனுமதியில்லை. என்னை விரும்பாத மக்கள் இருக்கும் இங்கு, என் மீது உள்ள அன்புக்காக மூன்று மணி நேரம் வரை நீங்கள் காத்திருக்கிறீர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
சச்சினின் ஓய்வு பற்றிய அறிவிப்பை கேள்விபட்ட ஷாருக்கான், இந்த முடிவு தனக்கு ஏமாற்றம் அளிப்பதாக ஏற்கனவே கூறியிருந்தார். கிரிக்கெட்டில் நிறையச் சாதனைகளைச் செய்த சச்சின் விளையாட்டை நன்கு உணர்ந்தவர். அவர் ஓய்வு எடுத்து குடும்பத்துடன் திருப்தியாக வாழவேண்டும் என்றும் வாழ்த்துத் தெரிவித்தார். (கு)

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு புதிய துடுப்பாட்ட பயிற்சியாளர்




பாகிஸ்தானின் கிரிக்கெட் அணிக்கான துடுப்பாட்ட பயிற்சியாளர் ஒருவரை புதிதாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தான் கிரிக்கட் அணியின் துடுப்பாட்ட திறன் தற்போது மோசமடைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.
பாகிஸ்தான் அடுத்த மாதம் இந்தியாவுக்கும், பின்னர் தென்னாப்பிரிக்காவுக்கும் சுற்றுத் தொடர்களில் பங்கேற்கவுள்ள நிலையில், புதிய துடுப்பாட்ட பயிற்சியாளரை நியமிக்கத் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கு)

# வரலாற்றில் இடம் பிடித்தார் ரோஹித் ஷர்மா



கன்னி டெஸ்ட் போட்டியில் சதத்தைப் பெற்ற 98ஆவது வீரராக ரோஹித் ஷர்மா வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். ஷீகர் தவான், சுரேஷ் ரெய்னா, விரேந்தர் சேவாக், சௌரவ் கங்குலி, மொஹமட் அசாருதீன், உள்ளிட்ட இந்திய வீரர்களும் இதற்கு முன்னர் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர். கொல்கத்தாவில் நடைபெறும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 127 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதன் மூலம் ரோஹித் ஷர்மா இந்த மைல் கல்லினை எட்டினார். (கு)

# சுருண்டது தீவுகள்; வென்றது இந்தியா



மேற்கிந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரரான முகமது ஷமி அபாரமாக பந்துவீச, இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. ஈடன் கார்டன் மைதானத்தில் கடைசியாக விளையாடிய சச்சின் வெற்றியுடன் விடைபெற்றார். இந்தியா வந்துள்ள மேற்கிந்திய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்தது. இது சச்சினின் 199வது டெஸ்ட் என்பதால், எதிர்பார்ப்பு எகிறியது. இந்தப் போட்டியில் மேற்கிந்தியாமுதல் இன்னிங்ஸில் 234 ஓட்டங்களுடன் சுருண்டது. இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகளை இழந்து 354 ஓட்டங்கள் எடுத்து, முன்னிலை பெற்றது. ரோகித் (127), அஷ்வின் (92) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. மேற்கிந்திய வீரர் பெஸ்ட்டின் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய அஷ்வின் டெஸ்ட் அரங்கில் தனது 2அஆவது சதத்தை எட்டினார். மறுமுனையில்அதிரடியாக ஆடிய ரோகித் சர்மா 150ஓட்டங்களைக் கடந்தார். இவர் 177 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அஷ்வின் (124), புவனேஷ்வர் (12) ஆகியோர் ஷில்லிங்போர்ட்டின் சுழலில்' சிக்கினர். இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 453 ஓட்டங்களை எடுத்து சகல இலக்குகளையும் இழந்தது.

மேற்கிந்தியா சார்பில் ஷில்லிங்போர்ட் அதிகபட்சமாக 6 இலக்குகளை வீழ்த்தினார்.

ஷமி அசுர வேகம்:

இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியாவுக்கு, மீண்டும் ஷமி தொல்லை தந்தார். புவனேஷ்வர் வேகத்தில்' முதலில் கெய்ல் (33) வீழ்ந்தார். அஷ்வின் சுழலில்' பவெல் (36), டெரன் பிராவோ (37) பெவிலியன் திரும்பினர். முன்னணி வீரர்கள் சரிந்த நிலையில், ஷமி போட்டுத் தாக்கினார். இவரது பந்துவீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாத சாமுவேல்ஸ் (4), ராம்தின் (1), சமி (8) விரைவில் வெளியேறினர்.

பின் வந்த ஷில்லிங்போர்டையும், ஷமி டக்-அவுட்டாக்கினார். வீராசாமி பெருமாள் (0), டினோ பெஸ்ட் (3), காட்ரெல் (5) ஆகியோரும் அணியைக் கைவிட, மேற்கிந்தியாவின் தோல்வி உறுதியானது. இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியா 168 ஓட்டங்களுடன் இந்தியாவிடம் சரணாகதி அடைந்தது. இதனால் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 51 ஓட்டஙகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. சந்தர்போல் (31) மட்டும் தீவுகள் சார்பில் ஆட்டமிழக்காதிருந்தார். ஆட்ட நாயகன் விருதை இந்தியாவின் ரோகித் சர்மா வென்றார்.

மேற்குவங்கத்தை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி அதிகபட்சமாக 5இலக்குகளையும், அஷ்வின் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

## இரண்டாவது இந்தியர்

தனது அறிமுக டெஸ்ட் போட்டியில் களம் கண்ட இந்தியாவின் ஷமி மொத்தம் 9 இலக்குகளை வீழ்த்தினார். இதன் மூலம், அறிமுக போட்டியில் அதிக இலக்குகளை வீழ்த்திய இரண்டாவது இந்திய வீரரானார். முதலிடத்தில் நரேந்திரா ஹிர்வானி (16 இலக்கு) உள்ளார். தவிர, உலக கிரிக்கெட் அரங்கில் 22வது வீரர் என்ற பெருமை பெற் றார்.



## முதல் இந்திய ஜோடி

நேற்றைய போட்டியில் இந்தியாவின் ரோகித், அஷ்வின் ஜோடி 7 ஆவது இலக்குக்கு 280 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம், ஆவது இலக்குக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த முதல் இந்திய ஜோடி என்ற சாதனை படைத்தது. இரண்டாவது இடத்தில் டோனி, லக்ஷ்மண் ஜோடி (259 ஓட்டங்கள்) உள்ளது. தவிர, ஒட்டு மொத்த அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

## சாமுவேல்ஸ் சர்ச்சை அவுட்'

முகமது ஷமியின் பந்தில் சாமுவேல்ஸ் (4) ஆட்டமிழந்தமை சர்ச்சையை ஏற்படுத்தியது. இவருக்கு நடுவர் நைஜல் லாங் (இங்கிலாந்து) தவறான முறையில் எல்.பி.டபிள்யு.. கொடுத்தார். எனினும் மீள்பரிசீலனையில் பந்து துடுப்பில் பட்டது தெரிந்தது. நேற்று முன்தினம், சச்சினுக்கும் இவரே தவறான முறையில் எல்.பி.டபிள்யு. கொடுத்திருந்தார்.

## 150ல் இரண்டு

அறிமுக டெஸ்டில் அசத்தலாக விளையாடிய இந்திய அணி வீரர் ரோகித் சர்மா 177 ஓட்டங்கள் குவித்தார். இதன் மூலம், அறிமுகப் போட்டியில் 150 ரன்கள் கடந்த இரண்டாவது வீரரானார். முதலிடத்தில் தவான் (187) உள்ளார். மூன்றாவது மற்றும் நான்காவது இடங்கள் முறையே விஸ்வநாதன் குண்டப்பா (137), கங்குலி (131) ஆகியோர் உள்ளனர்.

## குவிந்த பரிசுகள்

சச்சின் தனது 199வது டெஸ்ட் போட்டியை வெற்றியுடன் முடித்தார். இவருக்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நினைவுப் பரிசு வழங்கினார். தவிர, புத்தாடையும் வழங்கினார். இதனுடன் இணைந்து, தலைப்பாகையை, இந்திய அணி முன்னாள் அணித்தலைவர் கங்குலி, சச்சினுக்கு அணிவித்தார். அத்துடன், கொல்கத்தா கிரிக்கெட் சங்க தலைவர் டால்மியா, வெள்ளியிலான சிறிய ஆல மரத்தை பரிசாக தந்தார்.

## 199 பலூன்கள்

சச்சின் 199வது டெஸ்டில் களமிறங்கியதை குறிக்கும் வகையில், மைதானத்தில் 199 வண்ண பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

## அஷ்வின் சதம்

இந்தியாவின் அஷ்வின் நேற் றைய போட்டியில் சதம் கடந்தார். இது இவரின் இரண்டா வது டெஸ்ட் சதம். இதற்கு முன், மும்பை வான்கடேவில் நடந்த போட்டியில்



முதல் சதம் அடித்தார். இரண்டுமே மேற்கிந்திய அணிக்கு எதிராக அடிக்கப்பட்டவை. (ந)

கணினி விற்பனை/திருத்தம்
* LAP TOP கணினி
* DESK TOP கணினி
* கணினி உதிரிப்பாகங்கள்
} விற்பனை
* பழைய கணினி கொடுத்து 9000/= விலையில் கணினி மாற்றம்
* LAP TOP கணினி திருத்துதல்
* DESK TOP கணினி திருத்துதல்
* கமரா திருத்துதல்
மேலும் பல சேவைகள்
சென் அன்ரனிஸ்
187, கே.கே.எஸ். வீதி,
யாழ் நகர்.
021 222 4865
075 069 8608
16 ஆவது வருட சேவையில்

அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி யாழ்ப்பாணம்.
2014 இல் தரம் 4 ( தற்போது தரம் 3) மாணவர்களுக்கான வகுப்புக்கள் நாளை ஆரம்பமாகின்றன. அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
" சின்னவிழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம். இயக்குநர்.
(சி/12217) (14.8)

Study in
NEW ZEALAND
➤ BUSINESS MANAGEMENT
➤ COMPUTING & IT
➤ HOSPITALITY MANAGEMENT
➤ ENGINEERING
➤ TRAVEL & TOURISM
➤ QUANTITY SURVEYING & CONSTRUCTION MANAGEMENT
for more information
021 730 6000
011 434 3322
Ntec
Benefits for Students
- Direct entry in to the final year of your degree program
- IELTS exempted for Edexcel HND students
- Scholarships available for meritorious students
- Free laptop, airport pick up, 2 weeks accommodation, mobile SSIM card
- 3 campus locations to select from
- Our partner colleges is rated as a category1 education provider by the New Zealand qualification authority
ICS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
HOTLINE
தமிழில் தொடர்புகளுக்கு
077 301 3060

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
veta
Experts in English Training
Diploma in English
Foundation ENGLISH
Diploma in Fluent English Part - I
Diploma in Fluent English Part - II
அவரவர் நிலைக்கேற்ப பயிற்சிகள்
ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி
ஆங்கிலம் பேசுவதற்கு உத்தரவாதம்
IELTS
- Unique Test Tips
- Latest Materials
A1, A2, B1, B2
DMI COMPUTER EDUCATION
திருமணம் செய்து நிரந்தர வீசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்காக UK செல்வோருக்கும் பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலேயே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் — No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி — M.M.V வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி — கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் — கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.